வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
29.02.2024 வியாழக்கிழமை
இதழ் : 60
பக்கங்கள் : 12

# இலங்கைக்கு திரும்பவிருந்த சாந்தன் நேற்று உயிரிழந்தார்!



## உடலை கொண்டுவர நடவடிக்கை

சென்னை, பெப். 29

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான சாந்தன் என்றறியப்பட்ட சுதேந்திர ராஜா (வயது 55) நேற்று உயிரிழந்தார். நேற்றிரவு அவர் இலங்கைக்கு புறப்பட விருந்த நிலையிலேயே காலை 7.50 மணியளவில் மாரடைப்பால் மரணமானார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 7 பேர்களில் சாந்தனும் ஒருவர். பின்னர், ஆயுள் தண்டனையாக அவர்களின் தண்டனை குறைக்கப்பட்டது. பல வருடங்கள் சிறைத் தண்டனையின் பின்னர் சாந்தன் உள்ளிட்ட இலங்கையர்களான முருகன், ஜெயக்குமார்,

11

## கடந்து வந்த பாதை

1990 பெப்ரவரி - சாந்தன் தமிழ்நாட்டை சென்றடைந்தார்.

1991 மே 21 - இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டார்.

1991 ஜூன் 22 - ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தன் கைது செய்யப்பட்டார்.

1998 ஜனவரி 28 - குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை வழங்கியது சிறப்பு நீதிமன்றம்

1999 மே 11 - சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி ஆகியோருக்கு மட்டும் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.

1999 ஒக்ரோபர் 08 - மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க கேட்ட நால்வரின் மனுவும் நிராகரிக்கப்பட்டது.

11

# வெளிப்புற நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்தாதீர்!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப். 29

கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால் மாணவர்களை வெளிப்புற பயிற்சிகள் மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அறிவித்தலை விடுத்த கல்வி அமைச்சு நாளை வெள்ளிக்கிழமை வரை இந்த அறிவிப்பை பின்பற்றுமாறும் அறிவித்துள்ளது.

இதன்படி, பாடசாலைக்கு வெளியே மாணவர்களை விளையாட்டு நிகழ்வுகள்,

11

# ஐ. நா. மனித உரிமை பேரவையின் தீர்மானங்கள், பொறிமுறைகளை மீண்டும் நிராகரித்தது இலங்கை!

ஜெனிவா, பெப்ரவரி 29

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மற்றும் இந்தத் தீர்மானங்களால் ஏற்படுத்தப்பட்ட ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறைகளையும் நிராகரிப்பதாக இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் அறிவித்துள்ளது.

11




# தனியார் தூர சேவை பஸ்கள் நேற்று சேவைப் புறக்கணிப்பு

## உள்ளூர் சேவை மட்டும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 29

யாழ்ப்பாணத்தில் நேற்று தனியார் தூர சேவை பஸ்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டன. எனினும், யாழ். மாவட்டத்துக்குள் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. தூர இடங்களுக்கான பேருந்துகளின் சேவைப் புறக்கணிப்பால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாததால் நேற்று புதன்கிழமை முதல் தனியார் போக்குவரத்து சேவைகள் நடைபெறாது என்று தனியார்

11

# தமிழரினதும் சிங்களவரினதும் மரபணுவில் அதீத ஒற்றுமை!

புதுடில்லி, பெப். 29

இலங்கையில் நீண்ட யுத்தத்தில் ஈடுபட்ட தமிழர்களினதும் சிங்கவர்களினதும் மரபணுவில் அதீத ஒற்றுமை உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தெற்காசியாவின் வேறு எந்த இனக் குழுமத்தையும் விட இந்த இரு இனங்களும் மரபணு ரீதியில் அதிக ஒற்றுமையை கொண் டுள்ளனர் என்று ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

11

# மின்சாரக் கட்டணத்தை 14% குறைக்க முன்மொழிவு

கொழும்பு, பெப். 29

மின்சாரக் கட்டணத்தை 14 சதவீதம் குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிந்துள்ளது.

இந்த முன்மொழிவை இலங்கை மின்சார சபை கடந்த 22ஆம் திகதி அனுப்பிவைத்தது. இந்த முன்மொழிவையே நேற்று பொதுப் பயன்பாடுகள்

11

## மன்னார் காற்றாலை மின் திட்டம்:

# அதானி நிறுவனத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம்

### 10 இலட்சம் பறவைகள் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 29

மன்னார் காற்றாலை மின் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சுற்றுச் சூழல்சார் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படாவிடின் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் எச்சரித்துள்ளது.

மேலும், மன்னாரில் அதானி நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் காற்றாலை மின் திட்டம் நடைமுறைக்கு வந்தால் வருடாந்தம் 10 இலட்சம் பறவைகள் பாதிக்கப்படும் அல்லது அழிக்கப்படும்

11

# பிரதமர் வேட்பாளராக பஸில்?

கொழும்பு,பெப். 29

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதமர் வேட்பாளராக பஸில் ராஜபக்ஷ களமிறங்குவார் என்று ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

11

# பரந்துபட்ட கூட்டணி மூலமே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கண்டி, பெப். 29

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர, கட்சியின் நிலைப்பாடல்ல. பொதுஜன பெரமுன தலைமையிலான பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஊடாகவே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என்று ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

# இப்படியும் நடக்கிறது

தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது குறித்துப் பல தடவைகள் இந்த பத்தியில் எழுதியிருக்கின்றேன்.

எல்லை தாண்டி மீன்பிடிப்பது என்பது இரு தரப்பிலும் நடப்பதுதான். கடலில் எல்லையைக் கண்டுபிடிப்பது என்பது சாதாரணமானதல்ல. இதனால் எல்லையை தாண்டுவது என்பது இரு தரப்பிலும் நடந்துவருவது தான். ஆனால், இன்று தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது என்று மேலே நான் எழுதியிருப்பது, நாங்கள் எமது கடலில் தடை செய்து வைத்திருக்கும் இழுவைமடி மீன்பிடியில் அவர்கள் ஈடுபடுவதையே.

இழுவைமடி மீன்பிடி என்பது மீன்களை மாத்திரமல்ல, மீன்களின் வாழ்விடம், உணவு, உயிர்வாழ்வதற்கான சூழல் என்று அத்தனையையும் வழித்து எடுத்துவிடும்.

இன்று தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வருவது எதனால்?

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான கடலில் அரைவாசித் தூரம் இந்தியாவுக்கு சொந்தமானதுதானே. ஏன் அவர்கள் அங்கிருந்து இங்கு வந்து மீன் பிடிக்கிறார்கள்?. அவர்களின் கடலை அவர்கள் இந்த இழுவைமடி மீன்பிடியின் மூலம் நிர்மூலம் செய்துவிட்டார்கள். இப்போது அவர்களின் கடல்களில் மீன்கள் வாழக்கூடிய நிலைமையையே இல்லாமல் செய்துவிட்டார்கள். அதனால் தான் அவர்கள் இப்போது நமது கடலுக்குள் நுழைகின்றார்கள்.

கடந்த முப்பது ஆண்டுகால யுத்தம் நமது மீனவர்கள் கடலில் தொழிலுக்கு செல்லவில்லை. மீன்கள் வசதியாக நமது கடலில் வாழ்ந்து வருகின்றன. நாம் நமது கடலில் இழுவைமடி மீன்பிடியை தடை செய்து வைத்திருப்பதும் நமது கடல் மீன்வளம் குறையாமல் இருப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று.

அதனால்தான் அவர்கள் - தமிழக மீனவர்கள் இழுவைமடி படகுகளுடன் வந்த நமது கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றனர். இதனைத் தொடர்ந்து அனுமதித்தால் நமது கடலையும் இந்தியக் கடல்போல சுத்திகரிப்பதற்கு அதிக காலம் தேவையில்லை. அவர்கள் நூற்றுக் கணக்கான இழுவைமடி படகுகளுடன் வந்து தினமும் அள்ளிச் செல்வார்கள். இதனால் தான் அதனை அனுமதிக்க நமது மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடும் படகுகள் நூற்றுக்கணக்கானவை ஒரு சில தமிழக அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானவை. அவற்றில் மீன்பிடிப்பதற்காக இங்கு வருபவர்கள் சாதாரண தொழிலாளர்கள் தான்.

அதுதவிர, இதுவே மறுபக்கத்தில் இருந்தால் நமது மீனவர்கள் அப்படியொரு மீன்பிடியில் ஈடுபட்டால் அதனை தமிழக மீனவர்கள் அனுமதித்திருப்பார்களா என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

அதுவல்ல, இன்று நாம் பேச வருவது:

'இந்தியத் தரப்பிலிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் நான் அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்துவிட்டு எமது கடற்றொழிலாளர்களுடன் இணைந்து கடலில் எதிர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு தயாராக உள்ளேன்' என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதுமே டக்ளஸ் தேவானந்தாவை மீன்பிடித்துறை அமைச்சராக நியமித்தது எதற்காக என்பது நாம் ஆராய்ச்சி செய்து அறிய வேண்டிய விடயம் அல்ல. மீன்பிடித்துறை என்பது இலங்கையின் உயிர்நாடி. கடலால் சூழப்பட்ட இலங்கையில் கரையோரப் பகுதி முழுவதுமே மீனவர்களின் வாழ்விடம். அத்தகைய முக்கியத்துவம்வாய்ந்த அமைச்சு, டக்ளஸுக்கு கொடுக்கப்பட்டது, அவர் ஒரு சிரேஷ்ட அமைச்சர் என்பதற்கு அப்பால், இலங்கை - இந்திய மீன்பிடியில் நிலவும் இந்த சர்ச்சையை ஒரு தமிழரைக் கொண்டே கையாள்வதும் நோக்கமாக இருந்திருக்கலாம்.

அவர்களின் நோக்கம் எதுவாக இருந்தாலும் அவர் நமது கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற எந்த விடயத்தையும் செய்யப்போவதில்லை என்பதும் தெரிந்தது தான். அதனையே அவரும் இப்போது பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

ஆனால், அவர் சொல்லியிருக்கின்ற அந்தச் செய்தியில் பொதிந்திருக்கின்ற ஒரு தகவலை நமது தலைவர்கள் என்று சொல்பவர்கள் எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பது தெரியவில்லை.

'இந்தியத் தரப்பிலிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் ஏற்படுமாக இருந்தால்...' என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார் என்றாலும், அவர் அதனை ஓர் எச்சரிக்கையாகவே இப்போது சொல்லியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளமுடிகின்றது.

'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பது போல, அவர் விடுத்திருக்கின்ற எச்சரிக்கை அவர் புரிந்து கொண்டதுதான். அழுத்தம் ஏற்படுமாக இருந்தால் என்று அவர் சொல்வது அப்படியோர் அழுத்தம் ஏற்கனவே வந்துவிட்டதோ என்று எண்ணாமல் இருக்கமுடியவில்லை.

இந்தியா இதுபோன்றே தமது தேவைகளை அழுத்தங்கள் மூலம் தொடர்ந்து நிறைவேற்றி வருவது ஒன்றும் இரகசியமானது அல்ல. மன்னார் காற்றலைமின் உற்பத்தித்திட்டம் அதற்கு நல்ல உதாரணம். இதுகுறித்து - அதாவது நமது மீனவர்களை பாதுகாப்பது குறித்து இப்போதே கவனம் செலுத்த வேண்டும்.

- ஊர்க்குருவி.

# இந்தியக் கடற்படையின் கப்பல்கள் கொழும்புக்கு

கொழும்பு, பெப். 29

மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட முத்தரப்பு கடல்சார் பயிற்சி நிறைவடைந்தைத் தொடர்ந்து இரண்டு இந்திய கடலோர காவற்படை கப்பல்கள் நேற்று புதன்கிழமை காலி துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்த கப்பல்கள் பயிற்சி , இலங்கை கடலோர காவற்படையுடனான நட்புறவை மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை மேற்கொண்ட முத்தரப்பு கடல்சார் பயிற்சியின் 16ஆவது பதிப்பு தீவிர பயிற்சிகள் மற்றும் பயிற்சி அமர்வுகளுடன் கடந்த வாரம் ஆரம்பமானது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த பயிற்சி கடந்த 22 ஆம் திகதி முதல் 25ஆம் வரை நடை பெற்றது.

இதன்போது, இந்தியாவைச் சேர்ந்த கடலோர காவற்படை கப்பல்கள், இலங்கை மற்றும் மாலைதீவின் கடற்படைக் கப்பல்களும் பார்வையாளர்களாக கலந்துகொண்டன.

இந்த பயிற்சியில் இந்திய கடலோரக் காவல்படையின் 'சமாத்', 'அபினவ்', இலங்கையின் 'சமுத்ரா' ஆகிய கப்பல்கள் பங்கேற்றுள்ளன.

அத்துடன் இந்தியாவின் 'டோனியா' ரக விமானமும் பங்கேற்றது.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே, அதிகரித்த பிராந்திய பதற்றங்களுக்கு மத்தியில் இந்த பயிற்சி நடைபெற்றது. (அ)

## இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப். 29

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புராணபடன, சமஸ்கிருதம், கதாப்பிரசங்கம் ஆறு மாதகால இலவச கற்கை நெறி புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் வட பிராந்திய குருகுல பணிமனையில் மட்டும் இந்த வகுப்புகள் நடைபெற்றன. இந்த நிலையில், வேறு பிரதேசங்கள், மாவட்டங்களில் விண்ணப்பிப்போர் தொகை அதிகரிப்பின் அந்தந்த இடங்களிலும் இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்புகளில் பங்கேற்க விரும்புவோர் சமய ஆர்வலர்கள் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கிய சுயவிபரத்தை அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்யோகத்தரிடம் பெயர் முகவரியையும் விரும்பும் பாடத்தையும் பதிவு செய்யுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யா. அனிருத்தனன் கேட்டுள்ளார்.

விண்ணப்ப முடிவுத் திகதி 15.03.2024. யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகள் வடபிராந்தியம், குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம், என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

### கறுப்பு கொடி போராட்டம்

## வடமராட்சி கிழக்கு மீனவர்க்கு அழைப்பு

வடமராட்சி, பெப். 29

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து இலங்கை கடல் எல்லையில் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் பகுதிக்குள் அத்துமீறி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இந்திய இழுவைமடி படகுகளை எதிர்த்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கடலில் கறுப்புக் கொடி போராட்டம் நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் பங்கேற்க யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சமாசங்களின் சம்மேளனத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் அண்மைக் காலமாக இந்திய இழுவைமடி படகுகளின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. இதனால், வடமராட்சி கிழக்கில் குறித்த கறுப்புக் கொடி போராட்டத்துக்கு பலத்த ஆதரவு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-02)

## 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் 24 வயது இளைஞரும் பெற்றோரும் கைது!

கொழும்பு, பெப். 29

15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 24 வயது இளைஞர் உட்பட அவருக்கு உதவியதாக கூறப்படும் பெற்றோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் , தந்திரிமலை பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் , தனது மகள் காணாமல் போயுள்ளதாக கூறி ஓயாமடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் அநுராதபுரம் , தந்திரிமலை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த சிறுமி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காகவும் சிறுமியை பலாத்காரமாக வீட்டில் தடுத்து வைத்திருந்த குற்றத்திற்காகவும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# பாடசாலை விடயத்தில் அரசியல் தலையீடு வடக்கு மாகாணத்தின் கல்விக்கு கரி நாள்!

### அங்கஜன் இராமநாதன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 29

வடக்கு கல்விக்கு கரி நாளாக இன்றைய நிலையுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெண் அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளது. இதற்கு தடையேற்படுத்தும் வகையில் யாழில் உள்ள அமைச்சர் தனது அரசியல் தலையீட்டை செய்து மாணவர்களை தூண்டி ஆர்ப்பாட்டம், போராட்டங்களை செய்து வருகிறார்.

அதிபர் நியமனத்துக்கு என ஆணைக்குழு இருக்கின்றது. அந்த ஆணைக்குழுவே அதற்கான நியமனத்தை செய்துள்ளது. அதனை மீறி அரசியல் தலையீட்டால் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த நிலை தொடருமானால் வடக்கு கல்வி நிலை எவ்வாறு இருக்கும். ஒரு காலத்தில் இலங்கையின் மூளையாக யாழ்ப்பாணத்தை கூறினார்கள். ஆனால் இன்று அரசியல் தலையீட்டால் வடக்கு கல்விக்கு கரிநாளாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலையில் இந்த நிலையென்றால் ஏனைய பாடசாலைகள், ஏனைய விடயதானங்களில் அரசியல் தலையீடுகளால் வடக்கு மாகாணத்தின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
29.02.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பசுமை அபிவிருத்தியையும் எதிர்ப்பதா?

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, பசுமை ஐதரசன், பச்சை அமோனியாவுக்குமான மிகச் சிறந்த இடங்களில் ஒன்றாக வடக்கு மாகாணம் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. இதன் ஓர் அங்கமாக அதானி குழுமத்தின் முதலீட்டின் கீழ் மன்னாரில் காற்றாலை திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த காற்றாலை திட்டமானது சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாகக் கூறி சிலர் எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர்.

மன்னார் ஆயரும் இந்த விடயத்தைத் தாம் எதிர்ப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். பசுமை அபிவிருத்தி திட்டங்கள்தான் ஒப்பீட்டு அடிப்படையில் சுற்றுச் சூழலுக்கு மிகவும் உகந்த திட்டங்களாக நோக்கப்படுகின்றன - ஒப்பீட்டு அடிப்படையில் மிகவும் குறைவான சூழல் பாதிப்புகள் கொண்ட திட்டங்கள். இதன் காரணமாகவே உலகெங்கும் பசுமை அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

அதானி குழுமத்தின் திட்டங்கள் இலங்கையைப் பொறுத்தவரையில் வரப்பிரசாதமான திட்டங்களாகவே நோக்கப் படுகின்றது - குறிப்பாக இதனால், வடக்கு மாகாண மக்கள் அதிக நன்மையை பெறுவர். அதானி குழுமத்தின் காற்றாலை திட்டத்தால் மன்னார் பகுதி தேசிய அளவில் கவனிப்பைப் பெறும் இடமாக மாற்றமுறும். இதேவேளை, வடக்கு மாகாணத்தின் தொழில் துறை அபிவிருத்திக்கு இந்தத் திட்டம் அத்தியாவசியமானது. எந்தவோர் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கும்போதும் சுற்றுச் சூழலுக்கு சிறிதளவு தாக்கம் ஏற்படவே செய்யும். ஒப்பீட்டடிப்படையில் அதன் தாக்கத்தின் அளவையே நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் என்னும் அமைப்பு அதானி குழுமத்தின் மன்னார் காற்றாலை திட்டத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கூறுகின்றது. இந்தத் திட்டத்தால் பறவைகள் பாதிக்கப்படும் என்பதே அவர்களின் வாதம். அவ்வாறாயின் எந்தவொரு சிறிய பாதிப்பும் இல்லாமல் எவ்வாறு காற்றாலை திட்டத்தை முன்னெடுக்க முடியும்?

காற்றாலை திட்டத்தை எதிர்ப்போர் பல்லுயிர்கள் தொடர்பில் கரிசனை வெளியிடுகின்றனர். இவ்வாறு, இன்று - சுற்றுச் சூழல் தொடர்பில் கரிசனை காண்பிக்கும் எவருமே வடக்கு கடல் பகுதியில் கடல் அட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டபோது அதனால் ஏற்படவுள்ள சூழலியல் பிரச்னைகள் மற்றும் அது எவ்வாறு கடல்வாழ் உயிரினங்களை அழிக்கும் என்பது பற்றியெல்லாம் கேள்வி எழுப்பவில்லை.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் சுற்றுச் சூழலுக்கு மோசமான தீங்குகளை ஏற்படுத்துகின்றது. ஆனால், அது தொடர்பில் எவருமே பேசவில்லை. அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சிக்கவில்லை. ஆனால், ஒப்பீட்டு அடிப்படையில் மிகவும் குறைவான சூழலியல் தாக்கங்களை கொண்டிருக்கும் காற்றாலை திட்டத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறுகின்றனர். இது உண்மையிலேயே சுற்றுச் சூழல் தொடர்பான கரிசனையாக அல்லது இதற்கு பின்னால் வேறு நிகழ்ச்சிநிரல் ஏதும் இருக்கின்றதா என்னும் கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

வடக்கு மகாணத்தை நோக்கி இவ்வாறான பசுமை அபிவிருத்தி திட்டங்கள் வருகின்ற போது அதனை தமிழ் மக்கள் வரவேற்க வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து ஆளுமையுள்ள மத்தியதர வர்க்க மக்கள் வெளியேறி வருகின்றனர். தொழில்துறை வளர்ச்சியடையாமையும் இதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

# பெரும்பான்மை வாதத்தின் பாகுபாடே ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது!

### டில்லியில் இலங்கை இராஜாங்க அமைச்சர்

புதுடில்லி, பெப். 29

போரினால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததை இந்தியாவில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகிய பின்னர் நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பங்களிப்புடன் புதுடில்லியில் நடைபெற்ற புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார கலந்துரையாடல் சபையில் கருத்து வெளியிட்ட, இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, இலங்கையில் அதிகரித்த யுத்தச் செலவு எவ்வாறு அபிவிருத்திக்கு தடையாக இருந்தது என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

"1985இல் எங்களின் பாதுகாப்புச் செலவு 188 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, ஆனால் 2008இல் யுத்தத்தின் முடிவில் இந்த செலவு 1. 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது" என பாலசூரிய கூறியுள்ளார்.

மேலும், நாட்டின் தேசியவாதம் "சில சமூகங்களை" ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளியது என்பதை இராஜாங்க அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வின்றி இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியாது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"இது சில சமூகங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டியமை அவர்களை ஆயுதம் ஏந்த வழிவகுத்தது. வளர்ச்சி என்பது சமூகத்தின் சில பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட முடியாது. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளாவிட்டால், பெரும்பான்மைவாதம் என்ற துருப்புச் சீட்டை, அரசியல்வாதிகள் பயன்படுத்தி, குறிப்பிட்ட சமூகங்கள் மற்றும் பிரிவினரின் ஆதரவை பெற்றுக் கொள்ள முயற்சிப்பார்கள். இது கவனிக்கப்பட வேண்டும். இது நிலையான வளர்ச்சியைக் கொண்டிருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்."-என்றார். (அ)

# வடக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்தியா தொடர்ந்து ஒத்துழைக்கும்

### வடக்கு ஆளுநரிடம் புதிய தூதுவர் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 29

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரகத்தின் புதிய தூதுவர் வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்தார்.



யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ் .எம். சார்ள்ஸை நேற்று ஆளுநரின் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில், வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது இந்திய துணைத் தூதுவருக்கு தெளிவுப்படுத்தினார்.


அதற்கமைய, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என புதிய இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளி தெரிவித்தார்.

இளைஞர், யுவதிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கவும், தீவுகளுக்கான படகு சேவையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான வசதிகளை ஒழுங்கு செய்வதுடன், தரை மற்றும் கரையோர தூய்மை திட்டத்துக்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அதற்கான நிதியை தூதரகத்தின் சார்பில் ஒதுக்குவதாகவும் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் உறுதியளித்தார்.

(ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 29 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 17**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : பஞ்சமி**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்தநாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாககாணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறையும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உயர்அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**மகரம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். அக்கம் - பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப்போங்கள். கோபத்தை தவிர்க்க வேண்டும்.

# இலங்கையில் தமிழ் மக்களுக்கு தனிநாட்டை உருவாக்க வேண்டும்!

**பிரதமர் மோடியிடம் மதுரை ஆதீனம் கோரிக்கை**
*** கச்சதீவை மீட்கவும் வலியுறுத்து**

மதுரை, பெப். 29

இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாட்டை உருவாக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்று கூறிய மதுரை ஆதினம் கச்சதீவை மீட்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு வந்த இந்தியப் பிரதமர் நேற்றுமுன்தினம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டார்.

பிரதமரை மதுரை ஆதீனம் வரவேற்கக் காத்திருந்தார். அப்போது, அவரைக் கண்டு காரில் இருந்து பிரதமர் மோடி இறங்கினார். இதைத் தொடர்ந்து மதுரை ஆதீனம் அவருக்கு கௌரவம் அளித்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதுரை ஆதீனம், “பிரதமர் மோடியை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. கச்சதீவு மீட்க வேண்டும், இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாடு உருவாக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளேன். 2024இல் பா.ஜ.க. வெற்றி பெற்று மோடி மீண்டும் பிரதமர் ஆவார். மோடி மீண்டும் பிரதமராக என்னுடைய ஆதரவும் ஆசீர்வாதமும் என்றென்றும் உண்டு” - என்றார். (ஐ)

# தமிழர் கலாசார உடையில் மதுரையில் பிரதமர் மோடி!

மதுரை, பெப். 29

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பிரதமர் மோடி தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை, சால்வை அணிந்து தரிசனம் செய்தார்.

அம்மன் சந்நிதி வாசலில் பிரதமர் மோடிக்கு ஆலயத்தினர் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. (ஐ)



# திங்களன்று அ. தி. மு. க. ஆர்ப்பாட்டம்!

சென்னை, பெப். 29

போதைப் பொருட்களின் புழக்கத்தை கண்டித்தும், தி. மு. கவுக்கு எதிராகவும் அ. தி. மு. க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வரும் 4ஆம் திகதி - திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை,

தமிழ்நாட்டில் தி. மு. க. அரசு அமைந்த கடந்த 32 மாத காலத்தில் போதைப்பொருட்க



ளின் புழக்கம் அதிகரித்து வருவதையும் ஆளும் தி. மு. கவின் அயலக அணி துணை அமைப்பாளர் அ. ஜாபர் சாதிக் ஆஸி. நியூசிலாந்து நாடுகளில் போதைப் பொருளை புழக்கத்தில் விடும் கும்பலின் தலைவராக உள்ளார். அரசியல் பின்புலத்தை வைத்துக் கொண்டு ஜாபர் சாதிக் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு உடந்தையான தி. மு. க. அரசை கண்டித்து தமிழ் நாட்டின் அனைத்து மாவட்ட ஆட்சியர் பணிமனை முன்பாகவும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றார். (ஐ)

# தொகுதியை இறுதி செய்ய காங்கிரஸுக்கு காலக்கெடு!

சென்னை, பெப். 29

‘தமிழக காங்கிரஸுக்கு ஆறு தொகுதி, புதுச்சேரி காங்கிரஸுக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்படும்’ என தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் அஜோய் குமாரிடம் தி.மு.க., மேலிடம் தெரிவித்துள்ளது.

மேலும், இன்றைய தினத்துக்குள் காங்கிரஸ் தொகுதி எண்ணிக்கையை இறுதி செய்ய வேண்டும் என்றும் காலக்கெடு விதித்துள்ளது.

தி. மு. க., கூட்டணியில் காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், ம. தி. மு. க., விடுதலை சிறுத்தைகள், முஸ்லிம் லீக், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி உள்ளிட்டவை உள்ளன.

இதில், இராமநாதபுரம் தொகுதி முஸ்லிம் லீக் கட்சிக்கும், நாமக்கல் தொகுதி கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ், ம. தி. மு. க., விடுதலை சிறுத்தைகள், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தொடரும் என்று கூறப்பட்டது.

ஆனால், இன்றைக்கு தொகுதி பங்கீடு எண்ணிக்கை குறித்து, காங்கிரஸ் இறுதி செய்ய வேண்டும் என, தி.மு.க. காலக்கெடு விதித்துள்ளது.

இதனிடையே, தமிழ்நாடு காங்கிரஸ் முன்னர் 12 தொகுதிகளை கேட்டது. தற்போது 15 தொகுதிகளை கேட்கிறது. ஆனால், தமிழகத்தில் 6 தொகுதிகளும் புதுச்சேரியில் ஒரு தொகுதியுமே வழங்கமுடியும் என்று தி. மு. க. கூறியுள்ளது.

இதேநேரம், தி. மு. க. கூட்டணி தொகுதி பங்கீட்டு உடன்பாட்டை மு. க. ஸ்டாலினின் பிறந்த தினமான நாளை வெள்ளிக்கிழமை அறிவிக்கத் திட்டமிட்டு வருகின்றது. (ஐ)

# மொட்டுவின் வாக்குகளே ஜே.வி.பி பக்கம் செல்லும்!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 29

**பொதுஜன பெரமுன கட்சியின் வாக்குகளே ஜே.வி.பி. பக்கம் செல்லும். அக்கட்சி எவ்வளவுதான் துள்ளினாலும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவே வெற்றி பெறுவார் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளரான எஸ்.எம். மரிக்கார் எம்.பி. தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பிக்கு நான்கு லட்சம் வாக்குகளே கிடைத்தன. சஜித் பிரேமதாசவுக்கு 56 லட்சம் வாக்குகளும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 லட்சம் வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப்பெற்ற வாக்குகளில் 4 லட்சம் வாக்குகள் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களினது வாக்குகளாகும். அவர்கள் மீள வருவார்களா என தெரியவில்லை.

எனவே, 65 லட்சம் வாக்குகள் என வைத்துக்கொள்வோம், அதில் 20 லட்சம் வாக்குகளை எடுத்தால்கூட ஜே.வி.பியால் 25 லட்சம் வாக்குகள் என்ற கட்டத்துக்கே செல்ல முடியும்.



ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 லட்சம் வாக்குகள் கிடைத்தால்கூட 60 லட்சத்தை தாண்டிவிடலாம். மொட்டு கட்சி வசம் 20 லட்சம் வாக்குகள் இருக்கும், ஆக ஜே.வி.பி. 40 லட்சம் வாக்குகளைப் பெற்றால்கூட வெற்றி பெறமுடியாது-என்றார். (அ)

# பேக்கரி உற்பத்திகளின் விற்பனையில் வீழ்ச்சி!



கொழும்பு, பெப். 29

அதிகரித்த உற்பத்திச் செலவுகள் காரணமாக உள்ளூர் சந்தையில் கேக், பாண் மற்றும் பணிஸ் போன்ற பேக்கரி உற்பத்திகளின் விற்பனை சுமார் 50 சதவீதமளவில் குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், பட்டர் மற்றும் மாஜரின் விலைகள் 1000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு கிலோ ஒன்றுக்கு 3000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளும் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

எனவே உள்ளூரில் கிடைக்கும் முட்டை ஒன்றை 60 ரூபாவுக்கு வாங்கவேண்டிய நிலை உள்ளது. இந்நிலையானது பேக்கரி தொழிலுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கூறினார்.

எனவே எதிர்வரும் சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் பேக்கரி உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பொருட்களின் விலைகளைக் குறைத்து சலுகைகளை வழங்குமாறு பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# றொனி டி மெல் காலமானார்!

கொழும்பு, பெப். 29

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தனது 99ஆவது வயதில் நேற்று முன் தினம் காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

நிதியமைச்சர் பதவியை வகித்த காலத்தில் அவர் 11 வரவு - செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்து சாதனை படைத்திருந்தார்.



ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய இவர், 1977 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை நிதி அமைச்சராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹெரோயினுடன் ஆசிரியர் கைது

கொழும்பு, பெப். 29

ஹெரோயின் போதைப் பொருளுடன் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹலவத்தை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால், புத்தளம் - ஹலவத்தை வீதியின் லுனு ஓயா பாலத்திற்கு அருகில் வைத்து குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டவர் புத்தளம் பகுதியிலுள்ள தமிழ் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் என தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் குறித்த ஆசிரியரிடம் இருந்து 90மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ரணிலின் நடவடிக்கைக்கு நீதிமன்றத்தில் இடைக்கால தடையுத்தரவு பெற்ற லைக்கா

கொழும்பு, பெப். 29

தற்போது தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் அடிப்படையில், சிறிலங்கா ரெலிக்கொம் மற்றும் லங்கா வைத்தியசாலைகளின் பங்குகளை மாற்றுவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மார்ச் 12 ஆம் திகதி வரை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

லைக்கா மொபைல் சார்புடைய நிறுவனங்களின் இரண்டு ரிட் மனுக்களை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி. என். சமரகோன் இந்த இடைக்கால உத்தரவுகளை பிறப்பித்தார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களில், சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் 50.23 சதவீத பங்குகளையும், லங்கா வைத்தியசாலையின் 51.34 சதவீத பங்குகளையும் மாற்றுவதற்கான நடைமுறை தொடர்பான தகைமைக்கான விண்ணப்பங்களை பிரதிவாதிகளிடம் சமர்ப்பித்துள்ளதாக மனுதாரர் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் பொது நிறுவனங்களின் மறுசீரமைப்புக்கு பொறுப்பான அமைச்சரவை குழு அந்த விண்ணப்பங்களை எந்த காரணத்தையும் விளக்காமல் நிராகரிக்க முடிவு செய்ததாக மனுதாரர் நிறுவனங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

அமைச்சரவை உபகுழுவின் இந்த முடிவு தன்னிச்சையானது மற்றும் நியாயமற்றது என சுட்டிக்காட்டிய மனுதாரர் நிறுவனங்கள், அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்த போதிலும் தமது விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளாத குழுவின் தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என மனுதாரர் நிறுவனங்கள் தமது மனுக்களில் காட்டியுள்ளனர்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி, நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகிய தரப்பினரை மார்ச் 12ஆம் திகதி சாட்சியமளிக்குமாறு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

மனுதாரர் நிறுவனங்கள் சார்பில் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்சா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாம் முன்னிலையாகியுள்ளது. (அ)

# பாதாள உலகக் குழுவின் அச்சுறுத்தல் அதிகாரி நாட்டை விட்டு வெளியேற்றம்!

கொழும்பு, பெப். 29

பாதாள உலகக் குழு உறுப்பினர்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தல் காரணமாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் கீழ் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி துமிந்த ஜயதிலக்க, நாட்டை விட்டு வெளியேறி பிரான்ஸிற்கு சென்றுள்ளார்.

ஆட்டுப்பட்டி தெரு பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்கள் இருவருக்கு விசம் கலந்த பால் வழங்கப்பட்ட சம்பவம் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து ஹரக் கட்டாவை அழைத்துச் செல்ல திட்டமிட்ட சம்பவம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அவர் பொறுப்பேற்றிருந்தார்.

அத்துடன் கடந்த சில நாட்களாக பல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

எவ்வாறாயினும், குறித்த சோதனை நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களின் கைது உள்ளிட்ட விடயங்கள் காரணமாக, பாதாள உலகக் குழு உறுப்பினர்களிடம் இருந்து அவருக்கு தொடர்ச்சியாக தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ள போதைப்பொருள் வர்த்தகரான கஞ்சிப்பானை இம்ரானிடம் இருந்து அவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் கீழ் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி துமிந்த ஜயதிலக்கவுக்கு விசேட பாதுகாப்புகள் வழங்கப்பட்டதுடன் தனிப்பட்ட துப்பாக்கியும் வழங்கப்பட்டது.

எனினும், தமது 7 வயது மகள் மற்றும் மனைவியை இரகசிய இடமொன்றில் தங்க வைத்துவிட்டு அவர் பிரான்ஸ் நோக்கிச் சென்றுள்ளார்.

தமது மகள் மற்றும் குடும்ப நலன் கருதி இவ்வாறு செயற்பட்டதாக துமிந்த ஜயதிலக்க தெரிவித்தார். (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, பெப். 29

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கைச்சாத்திடப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் பாராளுமன்ற வாரத்தில் கையளிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் கையெழுத்திட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக தேசிய மக்கள் சக்தி மற்றும் உத்தர லங்கா சபாகய என்பன அறிவித்துள்ளன.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் சில சரத்துகள் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்துக்கு மாறாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அதனை நிறைவேற்றுவதற்கு அனுமதித்ததாக தெரிவித்து எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட ஆரம்பித்தன.



குறித்த செயற்பாடு அரசியலமைப்பை மீறுவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. (அ)

# ரணிலுக்கு ஆதரவளிக்காமல் இருக்க மொட்டுக் கட்சிக்கு உரிமை இல்லை!

## கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, பெப். 29

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காமல் இருக்க மொட்டு கட்சிக்கு உரிமை இல்லை என தனிப்பட்ட முறையில் தாம் நம்புவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொஹொட்டுவவிற்கு மாற்று வேட்பாளர் இல்லை என்றால் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதே சிறந்தது என அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க எமது கட்சித் தலைவர்களே தீர்மானம் எடுத்தனர். எமது கட்சியின் தலைவர்கள் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம் பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமிக்க ஆதரவளித்தோம். தற்போது பொருளாதார சவாலை வென்று நாட்டின் பிரச்னைகளை தீர்த்து வருகிறார். ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்கு மொட்டு எடுத்த தீர்மானம் அந்த நேரத்தில் எடுக்கப்பட்ட சிறந்த முடிவாகவே கருதுகிறேன். இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து இந்த நாட்டை மீட்பதற்கான திறன் வேறு எவருக்கும் இல்லை. அப்போது ஜனாதிபதி பதவியை ஏற்குமாறு பலரிடம் கேட்ட போது, மறுத்துவிட்டனர். அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய இருவரும் இந்தப் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதே இந்த தருணத்தில் கட்சி என்ற வகையில் நாம் எடுக்க வேண்டிய சரியான முடிவு என நான் கருதுகிறேன். அவர் எந்த கட்சி, எந்த சின்னத்தில் போட்டியிட விரும்புகிறார் என்பது குறித்து கலந்தாலோசித்து முடிவு செய்யலாம்.

பொதுஜன பெரமுன எப்போதுமே மக்களைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் சிந்தித்து முடிவுகளை எடுக்கும் கட்சியாகும். பஸில் விரைவில் இலங்கை வருகிறார். அவர் இலங்கைக்கு வந்த பின்னர் கட்சி பொறிமுறையை பலப்படுத்தி கட்சியை பலப்படுத்துவார். அதன் பின்னரே ஜனாதிபதி தேர்தலில் எடுக்கப்படும் தீர்மானத்தை கூறுவோம்-என்றார். (அ)

# 3 விமான சேவைகள் நேற்றும் இரத்தாகின!

கொழும்பு, பெப். 29

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பயணிக்கவிருந்த மூன்று விமான சேவைகள் நேற்றும் ரத்தாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று காலை 7.25 அளவில் ஹைதராபாத் நோக்கி பயணிக்கவிருந்த யு.எல்.177 என்ற விமானமும், 8.55 அளவில் காத்மண்டு நோக்கி பயணிக்கவிருந்த யு.எல்.181 என்ற விமானமும் ரத்தாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, நேற்று அதிகாலை கோலாலம்பூர் நோக்கி பயணித்த எம்.எச்.178 என்ற விமான சேவையும் ரத்து செய்யப்பட்டதாக வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகளின் தாமதம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு எதிர்வரும் சில நாட்களுக்குள் தீர்வு காண முடியும் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

திட்டமிடப்பட்டிருந்த 7 விமான சேவைகள் நேற்று முன்தினம் இரத்துச் செய்யப்பட்டதுடன், இதன் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

நேற்றைய தினம் ரத்தான விமான சேவைகளில் சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான 6 விமான சேவைகளும் அடங்குகின்றன.

விமான சேவைகள் இரத்துச் செய்யப்படுவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கிய சம்பவங்கள் கடந்த சில நாட்களாக பதிவாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் சிறிலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் அதிகாரிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடலின் போது கருத்து முரண்பாடுகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# செங்கடலுக்கு இலங்கை தனது கடற்படை கப்பலை அனுப்பியது

## பாத்பைன்டர் மாநாட்டில் அமெரிக்க தூதுவர்

கொழும்பு, பெப். 29

செங்கடலுக்கு இலங்கை தனது கடற்படை கப்பலொன்றை அனுப்பியதை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் உறுதி செய்துள்ளார்.

செங்கடலில் முன்னெடுக்கப்படும் புரோஸ்பெரிட்டி கார்டியன் நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதற்காக இலங்கை தனது கடற்படை கப்பலை அனுப்பியது என ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

பாத்பைன்டர் அமைப்பின் இந்து சமுத்திர பாதுகாப்பு குறித்த மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வழங்கிய கடற்படை கப்பலை செங்கடலிற்கு இலங்கை அனுப்பியதை சுட்டிக்காட்டிய அமெரிக்க தூதுவர் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் இலங்கையின் செயல்ஊக்கமான நடவடிக்கைகளை பாராட்டியுள்ளார்.

செங்கடல் ஏடன் வளைகுடா அராபிய கடல் போன்ற பகுதிகளில் சரக்குகப்பல்கள் ஹௌத்திகிளர்ச்சியாளர்களால் தாக்கப்படும் ஆபத்துள்ள நிலையில் சரக்குகப்பல்களை பாதுகாப்பதற்காக இலங்கை சர்வதேச கூட்டணியில் இணைந்து கொண்டது என ஜூலிசங் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது கடற்பகுதியை பாதுகாக்ககூடிய திறனை மேலும் அதிகரித்துக்கொள்வது குறித்து அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவால் மூன்று உப குழுக்கள் அமைப்பு

கொழும்பு, பெப். 29

தேர்தல் முறைமை மறுசீரமைப்பிற்காக ஒவ்வொரு துறை சார்ந்தும் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 3 உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தல் முறைமைகள் மற்றும் அது தொடர்பான அரசியலமைப்பிற்கு உட்பட்ட சட்டக்கட்டமைப்பு தொடர்பான யோசனைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் மாதவ தேவசுரேந்ர தெரிவித்துள்ளார்.

ஊடக மதிப்பீடுகள், பெண்கள் பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து மற்றுமொரு உப குழு பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது.

மற்றைய உப குழுவின் ஊடாக தேர்தலொன்று அறிவிக்கப்பட்டதன் பின்னர் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பொறுப்புகள், நடத்தை விதிமுறைகளை தயாரித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான பரிந்துரைகள் முன்வைக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்ர கூறினார்.

இந்த பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் புதிய தேர்தல் முறைமை தொடர்பிலான முதல்கட்ட அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா, சிங்கப்பூர், கனடா, பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, எஸ்டோனியா ஆகிய ஜனநாயக தேர்தல் முறைமை காணப்படும் நாடுகளின் தேர்தல் முறைமைகளை ஆராயும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த தேர்தல் முறைகளின் ஊடாக இலங்கையின் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரி தொடர்பில் தெளிவை பெற்றுக்கொள்வது இதன் நோக்கமாகும் என செயலாளர் கூறியுள்ளார். (அ)

# பாலியல் தொடர்பான கல்வியை வழங்க திட்டம்

கொழும்பு, பெப். 29

முன்பிள்ளை பருவம் முதல் வயது வந்தோர் வரை பாலினம் தொடர்பான கல்வியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள புதிய கல்வி வெளியீடுகளை எதிர்வரும் மாதம் 7 ஆம் திகதி வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தலைமையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற சிறுவர் ஒன்றியத்திலேயே கல்வி அமைச்சின் அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் காணப்படும் பல்வேறு பிரச்னைகளை மையமாகக் கொண்டு தனிநபர்களின் பாலினம் தொடர்பில் கொண்டுள்ள குறைந்த அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இந்த பாலியல் கல்வி வெளியீடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்பள்ளி மாணவர்கள் முதல் 13ஆம் தரம் வரையிலான பாடசாலை மாணவர்கள் வரையிலும், வயது வந்தவர்களுக்காகவும் இந்த வெளியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த பாலினம் தொடர்பான கல்வி வெளியீடுகள் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் முழுமையான மேற்பார்வை மற்றும் அவற்றின் அனுமதியுடன் துறைசார்ந்த நிபுணர்களால் தொகுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

முதல் கட்டத்தின் கீழ் பாலினம் தொடர்பான கல்வி வெளியீடுகளை இலத்திரனியல் வெளியீடுகளாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சமூகத்தில் உள்ள அனைத்து வயதினருக்கும் பாலினம் பற்றிய அறிவை முறையாக வழங்குவதன் மூலம், சமூகத்தில் உருவாகி வரும் பல நெருக்கடிகளை களைய முடியும் எனவும், இதன் மூலம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் எனவும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# துப்பாக்கி பிரயோகத்தில் சந்தேக நபர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 29

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் நபரொருவர் சூரியவெவ பகுதியில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் வீடொன்றில் மறைந்துள்ளதாக தகவல் கிடைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், சந்தேகநபரைக் கைது செய்வதற்காக அங்கு சென்றுள்ளனர்.

இதன்போது இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டிய - வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மஹபாகே பகுதியில் கடந்த 21 ஆம் திகதி ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை மற்றும் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் வெல்லம்பிட்டிய பகுதியில் ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை ஆகிய சம்பவங்களில் அவர் சந்தேகநபராகக் காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# கல்விசாரா பணியாளர்களைப் பாதிக்கும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு கண்டு மாணவர் கல்வியை உறுதி செய்க!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், பெப். 29

**கல்விசாரா பணியாளர்களைப் பாதிக்கும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு கண்டு மாணவர்களின் கல்வியை உறுதி செய்ய வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

**நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.**

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் சிக்கல்களிற்கு உரிய காலஅவகாசம் ஊழியர் சங்கங்களினால் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வு வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உடனடித் தீர்வினை வழங்கவேண்டி நாடு தழுவிய இடம்பெறும் வேலைநிறுத்தத்தில் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக, எங்களின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்னெடுக்கும் இருநாள் வேலைநிறுத்தத்திற்கு மாணவர்கள் நாங்கள் எமது விரிவுரைகளினைத் தவிர்த்து எங்கள் மூத்தவர்களிற்கு தார்மீக மற்றும் முழுமையான ஆதரவுகளினையளிக்கின்றோம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பால், அடித்தட்டு உழைக்கும் வர்க்கமும் முதற்கொண்டு அனைத்துத் தரப்பினரும் பாரிய நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ள நிலையில் அவற்றினை ஈடுசெய்வதற்கேற்ற சம்பள அதிகரிப்பென்பது அத்தியாவசியமான தொன்றாகும்.

மேலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அவ்வப்போது ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளினால் மாணவர்களின் கல்வியாண்டுகள் நிர்ணயித்தவற்றை விட காலத்தால் அதிகரித்துள்ள நிலையில், மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டேனும், காலதாமதம் ஏதுமின்றி கல்விசார ஊழியர்களைப் பாதிக்கும் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நியாயமான சிக்கல்களிற்கு விரைந்து தீர்வுகான உரிய தரப்புக்கள் முன்வர வலியுறுத்துகின்றோம்-என்றுள்ளது. (அ)

# சட்டவிரோத மின்வேலியில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, பெப்.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹன்போல்ட் தோட்ட பிரிவான கிலனிகல்ஸ் தோட்டத்தில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை பலியாகியுள்ளார்.

மதுரைவீரன் நாகராஜ் (வயது 56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு விலங்குகளிடம் இருந்து விவசாய பயிர்செய்கையை பாதுகாக்கும் நோக்கில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கியே இவர் உயிரிழந்துள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த குடும்பஸ்தரின், பக்கத்து வீட்டு காரர் பராமரித்து வரும் விவசாய காணிக்கு சட்ட விரோதமாக மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ள தாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (அ)

# கனடா ஆசைகாட்டி மோசடி செய்த பெண் கைதாகினார்

கொழும்பு, பெப். 29

கனடாவுக்கு அனுப்புவதாக கூறி பெருந்தொகை பணத்தை மோசடி செய்த இரட்டைக் குடியுரிமை கொண்ட பெண்ணொருவரை பாணந்துறை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் மாலம்பே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவர் கனடாவில் கணக்காளராக கடமையாற்றுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு நான்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், நாட்டிலுள்ள சுமார் 12 பொலிஸ் நிலையங்களில் அவர் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் சுமார் 8 வருடங்களாக பொலிஸாரிடம் இருந்து தலைமறைவாகியுள்ளதாகவும், மற்றுமொரு பொலிஸ் பணிக்காக சென்றிருந்த வேளையில் மாலம்பே பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# மாடுகள் கடத்திய நான்கு பேர் கைது

முல்லைத்தீவு, பெப். 29

அனுமதிப்பத்திரமின்றி ஒட்டுசுட்டான் நோக்கி மாடுகளை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுதந்திரபுரம் பகுதியிலிருந்து பரந்தன் வீதி ஊடாக ஒட்டுசுட்டான் நோக்கி அனுமதி பத்திரங்கள் ஏதுமின்றி 33 மாடுகளை வீதியூடாக நடத்திக்கொண்டு சென்றபோது புதுக்குடியிருப்பு பொலிஸார் கைவேலிப் பகுதியில் இடைமறித்துச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த நபர்களை கைது செய்ததுடன் மாடுகளையும் மீட்டனர். (அ)

# கொழும்பு துறைமுகத்தை மேம்படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 29

ஜப்பான் வழங்கிய மானியத்தின் கீழ் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்தை மேம்படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதார அவசர காலங்களில் இலங்கையை அணுகும் முக்கிய இடங்களான குறித்த பகுதிகளில் பயணிகள், ஊழியர்களின் பாதுகாப்பிற்காக ஜப்பான் அரசாங்கம் 1.17 பில்லியன் யென் மானியத்தை சர்வதேச குடியேற்ற அமைப்பு மூலம் வழங்கியுள்ளது.

இந்த மானியத்தின் கீழ், சர்வதேச நடைமுறைகள், பரிந்துரைகள் மற்றும் தரங்களுக்கு அமைவாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் கொழும்பு துறைமுகம் ஆகியவற்றின் வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சு, குடிவரவுத் திணைக்களம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை ஆகியவற்றுடன் இணைந்து சம்பந்தப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சகல எதிர்க்கட்சிகளும் ஆதரவு

கொழும்பு, பெப். 29

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்குச் சகல எதிர்க்கட்சிகளும் தமது ஆதரவை தெரிவித்துள்ளன. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு கிடையாது என்பதை சபாநாயகர் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஜனாதிபதியும், சபாநாயகரும் சட்ட விரோதமாகச் செயற்படுகின்றனர். எனவே தான் சபாநாயகருக்கு எதிராக




நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வந்துள்ளோம். அதற்குச் சகல எதிர்க்கட்சிகளினதும் ஆதரவு கிடைத்துள்ளது. நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை சபாநாயகர் நடைமுறைப்படுத்தவில்லை. குறித்த சட்ட மூலத்திலுள்ள 57 சரத்துக்களில் 35 சரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. ஆனால் சபாநாயகர் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக் கமையவே தான் செயற்பட்டதாக சபாநாயகர் குறிப்பிடுகின்றார். சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தை விட உயர்ந்தவர் அல்லர். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை சட்டமா அதிபரால் மாற்ற முடியாது என்பதைச் சபாநாயகர் அறிந்திருக்கவில்லையா? இது இவ்வாறிருக்க மறுபுறம் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரம் இன்றி பொலிஸ்மா அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# ராஜினாமாவுக்கான காரணத்தை வெளியிட்டார் உத்திக பிரேமரத்ன

கொழும்பு, பெப். 29

மக்களின் எதிர்பார்ப்பு தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து செயலாற்றுவது இளம் தலைவருக்கு அழகல்ல, எனது அரசியல் சிந்தனைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு தற்போதைய சூழ்நிலை கடினமானதாக அமையும். ஆகவே அரச இயந்திரத்தில் இருந்து தற்காலிகமாக விலகுகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-,

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அநுராதபுரம் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவாகிய நான் அப்போதைய அரசாங்கம் நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பில் அரசாங்கத்துக்கும்,அரச நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கினேன்.

இருப்பினும் சகல தரப்பினரது எதிர்பார்ப்புக்கள் முழுமையாக இல்லாதொழியும் வகையில் கடந்த காலங்களில் பல சம்பவங்கள் இடம்பெற்றன.

இவ்வாறான பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினராக அரச இயந்திரத்தில் ஒன்றிணைவதும்,அரச செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுவதும் இளம் தலைவருக்கு பொருத்தமற்றது.

இவ்வாறான நிலையில் எனது அரசியல் சிந்தனைகளை இவ்வாறான சூழலில் மேம்படுத்திக் கொள்வது கடினமானதாக அமையும்.

இதனால் தற்காலிகமாக இந்த அரச இயந்திரத்தில் இருந்து விலக தீர்மானித்துள்ளேன்.மேற்குறிப்பிட்ட காரணத்தை மேற்கோள்காட்டி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறேன்-என்றுள்ளது. (அ)

# குற்றச் செயல்களை ஒழிக்க முன்னேறிய நாடுகள் பயன்படுத்தும் வழிமுறைகளை பின்பற்றுவோம்!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 29

குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு உலகின் மிகவும் முன்னேறிய நாடுகள் பயன்படுத்தும் வழிமுறைகளை இலங்கை பொலிஸும் பின்பற்றும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் துறையின் குற்றப் பதிவுப் பிரிவின் கைரேகை அறிவியல் துறை பரீட்சையில் சித்தியடைந்த அதிகாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டே புதிய பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றும் எனது பதவிக் காலத்தின் இறுதி நாள் இன்று. நாளை முதல் தனது புதிய கடமைகளை ஆரம்பிக்கவுள்ளேன் எனவும் அவர் கூறினார். (அ)

# பாராளுமன்ற செயலாளர் நாயகம் தென்கிழக்கு பல்கலைக்கு விஜயம்

## பல்கலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் பங்கேற்பு

அம்பாறை, பெப். 29

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக, கலை கலாச்சார பீட அரசியல் விஞ்ஞான துறை இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் பாராளுமன்றத்துடன் இணைந்து, பல்கலைக்கழக உள்வாரி இளங்கலைப்பட்டதாரி மாணவர்களுக்கான "பாராளுமன்ற செயற்பாடுகளும் ஒழுங்கு முறைகளும்" பற்றிய குறுங்கால கற்கைநெறியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கலை கலாசார பீட அரசியல்துறை தலைவர் கலாநிதி எம்.அப்துல் ஜப்பார் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.



நிகழ்வில் வரவேற்புரையை கலாநிதி எம்.அப்துல் ஜப்பாரும் நிகழ்வுபற்றிய அறிமுக உரையை பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம்மட் ஆகியோரும் ஆற்றினர்.

பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவுடன் இணைந்து இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹனதீர கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீட அரசியல் துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் மற்றும் பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம்மட் ஆகியோரின் கூட்டு நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வுகளுக்கு அனுசரணையை யு.எஸ். எய்ட் மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனம் என்பன வழங்கியிருந்தன.

கற்கை நெறியை பூர்த்தி செய்த 246 மாணவர்கள் இந் நிகழ்வின்போது சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். (அ)

# களுவாஞ்சிக்குடியில் நடந்த சர்வதேச தாய்மொழி தினம்



காரைதீவு, பெப். 29

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம் சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த சர்வதேச தாய்மொழி தின நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

தாய்மொழிக்காக போராடி உயிரிழந்தவர்களை நினைவு கூறி, உலகின் அனைத்து மக்களின் தாய்மொழி உரிமையை பாதுகாக்கும் வகையில் பெப்ரவரி 21ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக ஐ.நாவின் யுனெஸ்கோ 1999ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது.

இதனையடுத்து 2000ஆம் ஆண்டிலிருந்து பெப்ரவரி 21ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக கொண்டாடப்படுகின்றது.

இதன்போது "நம் தாய்மொழியை பேணுதல் ஒரு பன்முக நோக்கு" எனும் தலைப்பின் கீழ் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதி பதிவாளர் த. சஞ்சீவி சிவகுமாரினால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

பிரதேச கலைஞர்களின் பாடல்கள் மற்றும் கணேஷா கலைக்கழக மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கதிரவன் பட்டிமன்ற பேரவை வழங்கிய 126வது சிறப்பு பட்டிமன்றம் "தற்காலத்தில் தமிழ்மொழி வளர்கிறது......தற்காலத்தில் தமிழ்மொழி தளர்கிறது" எனும் தலைப்பில் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்ய கௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவல உத்தியோகத்தர்கள், பிரதேச மூத்த எழுத்தாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# ஊழியர்களின் போராட்டம் காரணமாக தென்கிழக்கு பல்கலை பணி ஸ்தம்பிதம்!

அம்பாறை, பெப். 29

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனம், முன்னெடுத்துள்ள தொடர்ச்சியான இரு நாட்கள் கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தின் எதிரொலியாக நேற்று தென்கிழக்கு பல்கலைக் கழக ஊழியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் காரணமாக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்தன.

நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் எம். எச். நபார் மற்றும் கல்விசார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் ஆகியோரது இணைந்த தலைமையில் இடம்பெற்ற குறித்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் பெரும் அளவான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தின் காரணமாக நேற்று இடம்பெறவிருந்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு அடுத்த தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம் பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத கொடுப்பனவை வழங்கு என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப் பட்டன. (அ)



# மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு ஏக்கர் வயல் காணி கொள்வனவு

காரைதீவு, பெப். 29

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர்மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு எண்பது லட்சம் ரூபாய் செலவில் இரண்டு ஏக்கர் வயல் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகத்தின் போது ஊர் ஊராய் சேகரித்த பணத்தில் கும்பாபிஷேகம் முடிந்த பிற்பாடு எஞ்சிய 80 லட்ச ருபாய் நிதியில் இக் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

இந்த காணி உரிமை பத்திரம் கைமாறுகின்ற நிகழ்வு கல்முனை பிரபல சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில், பரிபாலன சபையின் ஆலோசகர் வி. ரி.சகாதேவராஜா, செயலாளர் த.சண்முநாதன், பொருளாளர் அ.சுந்தரராஜன், உபதலைவர்களான கே.சண்முகநாதன், ரி. நேமிநாதன் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் முன்னிலையில் காணி பத்திரம் கைமாறப்பட்டது.

காரைதீவு பிரதான வீதியில் விபுலானந்தா முச்சந்தி அருகில் உள்ள திரு திருமதி வேற்குமரன் நிஷாந்தினி தம்பதியினரிடமிருந்து இக் காணி கைமாறப்பட்டது.



எஞ்சிய நிதியை இவ்வாறு நிரந்தர சொத்தாக சேர்த்த நிருவாகத்தினரின் முன்மாதிரி பக்தர்கள் பொதுமக்கள் மத்தியில் பெரு வரவேற்பு பெற்று இருக்கின்றது . பாராட்டும் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

இக்காட்சி அம்மனுக்கு நிலையான சொத்து என்பதோடு அதிலிருந்து வருகின்ற குத்தகை பணம் மாதா மாதம் அம்மனுக்குரிய பூசை செலவுகள் ஏனைய செலவுகளுக்கு பயன்படும் வண்ணம் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதன் முதலில் 2022 இல் இடம்பெற்ற கும்பாபிஷேகத்திற்காக அம்பாறை மாவட்டத்தின் ஆறு பிரதான தமிழ் கிராமங்களுக்கு சென்று நிதி சேகரிப்பு செய்தபோது சுமார் 2 கோடி ரூபாய் நிதியை மக்கள் வாரி வழங்கினார்கள்.

கும்பாபிஷேக சங்காபிஷேகம் ஏனைய செலவுகள் நிறைவடைந்ததும் எஞ்சியிருந்த 80 லட்சம் ரூபாயை அம்மனுக்கு சொத்தாக்கி இருப்பது பெரும் வரவேற்பைப் பெற்றது. (அ)

ஈழநாடு



# ரஷ்யாவுக்கு வடகொரியா பெருமளவு ஆயுத ஏற்றுமதி

## தென்கொரியா குற்றச்சாட்டு



**சியோல், பெப். 29**

**உக்ரேனுக்கு எதிரான போரில் ரஷ்யாவிற்கு பாரியளவான ஆயுதங்களை வட கொரியா ஏற்றுமதி செய்துள்ளதாக தென்கொரியா குற்றம் சுமத்தியுள்ளது.**

அதன்படி கடந்த ஜீலை மாதத்திலிருந்து இதுவரை சுமார் 6,700 கொள்கலங்களில் மில்லியன் கணக்கான துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட ஆயுதங்களை வடகொரியா அனுப்பிவைத்துள்ளதாக தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் சின் வென் சிக் தெரிவித்துள்ளார்.

ஆயுத வழங்கலுக்கு பதிலீடாக உணவுப் பொருட்களை ரஷ்யா, வடகொரியாவிற்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வட கொரிய ஆயுத தொழிற்சாலைகள் குறைந்த மூலப்பொருள் மற்றும் மின்சார குறைவு காரணமாக தமது வினைதிறனை இழந்துள்ளதாகவும் தென்கொரியா சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரபாவை நோக்கிப் நகரும் இஸ்ரேல்!



ஜெருசலேம், பெப். 29

ஹமாஸ் படையினரை முற்றாக ஒழிக்கும் விதமாக இஸ்ரேல் இராணுவம் காஸாவில் தீவிரமாகத் தாக்குதல் நடத்திவரும் நிலையில் இதன் அடுத்த கட்டமாக சுமார் 14 இலட்சம் பலஸ்தீனர்கள் உள்ள ரபா நகரை முற்றுகையிட இஸ்ரேல் இராணும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த பகுதியில் இருக்கும் மக்களை வெளியேற்றுவதற்கான திட்டத்தை இஸ்ரேல் இராணுவம் தாக்கல் செய்திருப்பதாக அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் அறிவித்துள்ளது.

எனினும் பொதுமக்கள் எப்படி, எந்த பகுதிக்கு மாற்றப்படுவார்கள் என்பது குறித்த எந்த விவரமும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவில் குவியும் சடலங்கள்!



ஜெருசலேம், பெப். 29

காசாவில் மாதக்கணக்கில் இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்துவரும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 96 பேரின் உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்களில் காயம்பட்ட 144 பேர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டனர். போரில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை 29,878 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பயங்கரவாதிகள் எத்தனை பேர், பொதுமக்கள் எத்தனை பேர் என்பது குறித்த விவரங்களை அமைச்சு வெளியிடவில்லை.

70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்த போரில் காயமடைந்துள்ளனர். இன்னும் பலர் கட்டட இடிபாடுகள் இடையில் சிக்கியிருப்பதாகவும் அவர்களை மீட்பதில் சிக்கல் தொடர்வதாகவும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் காசாவுக்கிடையிலான போர் நிறுத்தம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்ப்பார்க்கப்படுவதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.


போர் நிறுத்தம் தொடர்பில் கட்டார் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை தொடர்ந்தே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தரப்பினரை விடுவிப்பது தொடர்பான புதிய ஒப்பந்தத்தை ஹமாஸ் இயக்கம் ஏற்றுக் கொள்ளுமா இல்லையா என்பது தொடர்பில் தற்போது சந்தேகங்கள் எழுந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கூறியுள்ளது. (அ)

# குறைந்த ஊதியம் மற்றும் பணிச்சுமையால் தாதியர்கள் வேலையை விட்டு வெளியேறலாம்!

## இங்கிலாந்து அரச தாதியர் கல்லூரி எச்சரிக்கை



லண்டன், பெப். 29

இங்கிலாந்தில் உள்ள தேசிய சுகாதார சேவை மற்றும் தாதி ஊழியர்களில் பாதிக்கும் மேற்பட்டார் குறைந்த சம்பளம் மற்றும் அதிக பணிச்சுமை காரணமாக வேலையில் இருந்து வெளியேறலாம் என இங்கிலாந்து அரச தாதியர் கல்லூரி எச்சரித்துள்ளது.

அதிகமான ஊழியர்கள் வேலையை விட்டு வெளியேறுவதை தடுக்க அரசாங்கம் மேலதிக நிதியை ஒதுக்க வேண்டும் என அரச தாதியர் கல்லூரி கோரிக்கை விடுத்துள்ளது.

ஊழியர் பற்றாக்குறையால் ஏற்கனவே கடும் நெருக்கடியில் உள்ள தேசிய சுகாதார சேவையில் இருந்து, மேலும் ஊழியர்கள் வெளியேறுவது பெரும் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கு பணவீக்க வீதத்திற்கும் மேல் ஊதிய உயர்வு மற்றும் மேலதிக கொடுப்பனவை வழங்க வேண்டும் எனவும் அரச தாதியர் கல்லூரி மற்றும் தேசிய சுகாதார சேவை என்பன கோரிக்கை விடுத்துள்ளன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை.

தமது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அரச தாதியர் கல்லூரி தனது பரிந்துரைகளை தேசிய சுகாதார சேவையின் சம்பள மீளாய்வு அமைப்பிடம் சமர்ப்பித்து அரசாங்கத்திற்கு சம்பள சீர்திருத்தம் குறித்து ஆலோசனைகளை வழங்கியுள்ளது.


தேசிய சுகாதார சேவையின் பாதிக்கும் மேற்பட்ட தாதியர்கள், குறைந்த சம்பளம் மற்றும் இதர சலுகைகள் இல்லாத காரணத்தால் சேவையில் இருந்து வெளியேறுவது குறித்து ஆலோசித்து வருவதாக அரச தாதியர் கல்லூரி தெரிவித்துள்ளது.


அத்துடன் தேசிய சுகாதார சேவையினர் கடந்த ஆண்டை போன்று இந்த ஆண்டும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடலாம் என தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இங்கிலாந்தில் மாத்திரம் தேசிய சுகாதார சேவையில் சுமார் 42 ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இது மேலும் அதிகரித்தால், தேசிய சுகாதார சேவைக்கு கடும் நெருக்கடி ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# அமெ. மாநில தேர்தலில் பைடன், ட்ரம்ப் வெற்றி!





நியூயோர்க், பெப். 29

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மிச்சிகன் மாநிலத்தில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார் என்று ஊடகங்களின் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

எனினும், காசா மீதான இஸ்ரேலின் போருக்கு அவர் அளித்த ஆதரவில் குறிப்பிடத்தக்க எதிர்ப்பினையும் அவர் தேர்தலில் எதிர்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு பெரிய அரபு-அமெரிக்கத் தொகுதியைக் கொண்ட மிச்சிகனில், பைடனின் காசா கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ஜனநாயகக் கட்சி வாக்காளர்கள் தங்கள் முதன்மை வாக்குகளை செவ்வாயன்று “உறுதியற்றவை” எனக் குறிக்குமாறு வலியுறுத்தப்பட்டனர்.

25 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், பைடன் ஒட்டுமொத்தமாக 80% வாக்குகளை வென்றதாக தெரிவிக்கிறது.

இதனிடையே, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், மிச்சிகனில் நடந்த குடியரசுக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கணிப்புகளின்படி, அவரது போட்டியாளரான நிக்கி ஹேலி இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

மதிப்பிடப்பட்ட குடியரசுக் கட்சி வாக்குகளில் 8 சதவீதம் எண்ணப்பட்ட நிலையில், டிரம்ப் 64 சதவீத வாக்குகளை பெற்றதுடன், ஹேலி 32 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளார்.

மிச்சிகன் மாநிலம் எதிர்வரும் நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் பைடனுக்கும் டிரம்புக்கும் இடையிலான மறுபோட்டியில் ஒரு சிக்கலான களமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2020 தேர்தலில் மிச்சிகனில் ட்ரம்பை வெறும் 2.8 சதவீத புள்ளிகளால் பைடன் தோற்கடித்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# குழந்தைகளிடையே இந்த ஆண்டில் அதிகரிக்கும் ஊட்டச்சத்து குறைபாடு!

**குடும்ப சுகாதார பணியகம் தகவல்**

கொழும்பு, பெப். 29

**கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளதாக குடும்ப சுகாதார பணியக அதிகாரி வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகளவான எடை குறைந்த மற்றும், உடல் ஊனமுற்ற சிறுவர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் ஹம்பாந்தோட்டை உட்பட நாடளாவிய ரீதியில் இவ்வாறானதொரு நிலை காணப்படுவதாக அரசியல் வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தாலும் எவரும் அதனை கருத்திற்கொள்ளவில்லை.

மேலும் குடும்ப சுகாதார பணியகத்தின் அறிக்கைகளின் படி, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் இறுதியில், குழந்தைகளின் உயரம் மற்றும் எடை குறைவு போன்ற ஊட்டச்சத்து நெருக்கடிகள் நாடு முழுவதும் காணப்படுகின்றன-என்றார். (அ)

# சுகாதாரப் பரிசோதகர் படுகொலை: விரைவில் உண்மைகள் வெளிவரும்!

கொழும்பு, பெப். 29

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்கள் விரைவில் தெரியவரும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

படுகொலைசெய்யப்பட்ட ரொஷான் குமாரவின் வீட்டுக்கு சென்று இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-



ரொஷான் குமாரவை படுகொலை செய்தவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 4 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# கட்டட சுவர் இடிந்து விழுந்து ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 29

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைலெவல் வீதிக்கு அருகில் உள்ள கட்டடத்தை இடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 2 ஊழியர்கள் மீது கட்டடத்தின் சுவர் இடிந்து விழுந்துள்ளது. இதில் ஒருவர் பலியாகியுள்ளார்.

சுவர் விழுந்து காயமடைந்த ஊழியர்கள் இருவரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் 45 வயதான ஒருவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மற்றைய நபர் களுபோவில வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக ஏழு மனுக்கள்!

கொழும்பு, பெப். 29

பதில் பொலிஸ்மா அதிபராக பணியாற்றிவந்த தேசபந்து தென்னக்கோனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் 36ஆவது பொலிஸ்மா அதிபராக நியமித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் 7 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக கத்தோலிக்க திருச்சபை, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட 7 தரப்பினர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

தாக்கல் செய்யப்பட்ட ஏழு அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பது தொடர்பான அரசியலமைப்பு பேரவைக்கு இன்னும் அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை என நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நாடு முழுவதும் வனவிலங்கு அலுவலர்கள் பற்றாக்குறை!

கொழும்பு, பெப். 29

நாடு முழுவதும் 441 வனவிலங்கு உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், இது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 51 வீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வனவிலங்கு கட்டுப்பாட்டு அலுவலர்கள் சங்கத் தலைவர் எம். பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் யானை - மனித மோதலை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வறண்ட பிரதேசங்களில் யானை-மனித மோதல்கள் அதிகரிப்பதற்கு அதிகாரிகளின் பற்றாக்குறை முக்கிய காரணமாக உள்ளது-என்றார். (அ)

# நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் பொலிஸ் அலுவலர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, பெப். 29

மாத்தறை கொடவில நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு உயிர் மாய்த்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொடவில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 52 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு உயிர் மாய்த்தார்.

நீண்ட நாட்களாக சுகவீன விடுமுறையில் இருந்து பணிக்கு திரும்பிய அவர், கொடவில நீதிமன்ற வளாகத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் உயிர் மாய்த்தார். (அ)

# எம்.பியாகிறார் முத்துகுமாரன!

கொழும்பு, பெப். 29

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உத்திக பிரேமரத்ன இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் எஸ்.சி.முத்துகுமாரன நியமிக்கப்படவுள்ளார்.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியமைக்கான காரணத்தை உத்திக பிரேமரத்ன இதுவரை பகிரங்கப்படுத்தவில்லை.

உத்திக பிரேமரத்னவின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனம் வெற்றிடமாக இருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கவுள்ளார்.

இதையடுத்து, புதிய பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

நல்லூரில் இடம்பெற்ற விபத்து;

# பஸ்ஸின் வழித்தட அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 29

நல்லூர் பகுதியில், கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பில், பூரண விசாரணை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் வட பிராந்திய தலைவருக்கு, வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய, விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் வழித்தட அனுமதி, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் வட பிராந்திய தலைவர் அறிவித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளுக்கு மேலதிகமாக, தமது அதிகார சபை உள்ளக விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# மீண்டும் கால்நடைகளுக்கு பெரியம்மை நோய்ப்பரவல்

கிளிநொச்சி, பெப். 29

கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் கால்நடைகளுக்கு பெரியம்மை நோய்ப்பரவல் ஆரம்பித்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு, தர்மபுரம் பகுதியில் இவற்றின் தாக்கத்தினை அவதானிக்க முடிகிறது.

வைரஸ் நோயான இந்த நோய் வெப்பமான காலநிலையின் போது கால்நடைக்கு பரவி வருகிறது. கடந்த வருடமும் குறித்த நோயின் தாக்கமானது கிளிநொச்சி மாவட்டம் அடங்கலாக வடமாகாணம் மற்றும் தென் மாகாணங்களிலும் அதிகரித்திருந்தது.

உணவில் நாட்டமின்மை, எழும்பி நடக்க முடியாத நிலை,



கொப்பளங்கள் உருவாகி பெரிய காயங்கள் ஏற்படுதல் போன்றவை இதன் அறிகுறிகள் ஆகும்.

கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் மு.கஜரஞ்சனிடம் இது தொடர்பில் கேட்டபோது, குறித்த நோய்க்கான தடுப்பூசியை பதிவு செய்து பணம் செலுத்தி கால்நடை வளர்ப்பாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

எனினும் பணம் செலுத்த வேண்டிய தேவையுள்ளதால் பண்ணையாளர்கள் பதிவு செய்து பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கின்றனர். (அ)

## தனியார்...

பேருந்து உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் சி. சிவபரன் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

யாழ். போதனா மருத்துவமனையின் பின்புற வாயிலின் அண்மையாக தனியார் பேருந்துகள் தரித்து நின்று சேவை வழங்கி வந்தன. இந்த நிலையில், நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் நின்று சேவை வழங்குவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே சேவைப் புறக்கணிப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார் பேருந்துகளின் சேவைப் புறக்கணிப்பால் வெளிமாவட்டங்களுக்கான சேவையில் இ. போ. ச. பேருந்துகள் மட்டுமே ஈடுபட்டன. இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

முன்னதாக, தூர இடங்களுக்கான சேவையை வழங்க பேருந்து நிலையம் ஒன்று செல்வா சதுக்கம் முன்பாக அமைக்கப்பட்டது. இ. போ. ச. பேருந்துகள், தனியார் பேருந்துகள் அங்கிருந்து சேவை வழங்கும் நோக்கில் இந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால், இ. போ. ச. பேருந்துகள் பேருந்து நிலையத்தில் இருந்தே சேவையை வழங்குகிறது. இது தமக்கு பாதிப்பு என்றும் இ. போ. ச. பேருந்து களையும் அங்கிருந்தே சேவை வழங்க வேண்டும் என்றும் தூர இடங்களுக் கான சேவை வழங்கும் தனியார் பேருந்து சேவையில் ஈடுபடுபவர்கள் வலியுறுத்தி வருவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## பரந்துபட்ட...

மேலும், அரசாங்கத்தில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பதவி வகிப்பவர்கள் மாத்திரம் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் மாற்று யோசனைகளை முன்வைத்துள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று குறிப்பிடுவது கட்சியின் நிலைப்பாடல்ல. இது ஒரு தரப்பினரின் தனிப்பட்ட நிலைப்பாடாகும். ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை அறிவிப்போம்.

பொதுஜன பெரமுன சார்பில் நிறுவப்படும் பரந்துபட்ட அரசியல் கூட்டணி மூலமே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் - என்றார். (ஐ)

## அதானி...

அபாயம் உள்ளது என்று எச்சரித்துள்ளார் மூத்த பல்லுயிர் விஞ்ஞானி கலாநிதி ரெஹான் பெத்தியகொட.

நேற்று முன்தினம் அந்த சங்கத்தினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே ரெஹான் பெத்தியகொட மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். அத்துடன், மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பான தீவிர சுற்றுச்சூழல் தொடர்பான கரிசனைகள் மற்றும் முன்மொழிகள் எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதிக்கு முன்னதாக மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், மத்திய ஆசிய பறவைகளின் பாதையின் தெற்கே 30 நாடுகளிலிருந்து 250 இனங்களை சேர்ந்த சுமார் ஒன்றரை கோடி பறவைகள் நாட்டுக்கு வருகின்றன. இவற்றில் 150 இனங்களை சேர்ந்த 10 இலட்சத்துக்கும் அதிகமான பறவைகள் மன்னாருக்கு வருகின்றன. இது முக்கியமான உயிர்சூழல் நிலமாக உள்ளது. அத்துடன், அருகி வரும் 26 பறவை இனங்கள் இனப்பெருக்கம் செய்யும் இடமாகவும் உள்ளது.

மன்னார் வழித்தடத்தில் வரவுள்ள 50 ரேர்பைன் காற்றாலை மின் திட்டத்தால் இந்தப் பறவைகள் அனைத்தும் பாதிக்கப்படும் அல்லது அழிக்கப்படும். மேலும், சுற்றுச்சூழல் அழிவு பொருளா தார சமநிலைக்கும் குறிப்பிடத்தக்க அபாயங்களை ஏற்படுத்தும் -என்றார். (ஐ)

## வெளிப்புற...

உடற்பயிற்சிகள், மற்றும் மைதான நிகழ்வுகள் மற்றும் வேறு எந்த வெளி நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்த வேண்டாம் என்று வலயக் கல்வி பணிப்பாளர்கள் ஊடாக முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## பிரதமர்...

பாராளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து பஸில் ராஜபக்ஷ வரும் மார்ச் 5ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து நாடு திரும்புகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடு திரும்பும் பஸில் ராஜபக்ஷவுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதியும் பஸிலின் சகோதரருமான மகிந்த ராஜபக்ஷவும் அடுத்த வாரம் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்புவார் என்று கூறியிருந்தமை குறிப்பிடதக்கது. (ஐ)

## தீர்மானங்கள்...

அத்துடன், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் செயல்பாடுகள் உள்நாட்டு வாக்குவங்கி அரசியல் அல்லது குறுகிய அரசியல் நோக்கங்களுக்குள் அகப்படக்கூடாது - என்று மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆற்றிய காணொலி உரையில் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது அமர்வு ஜெனிவாவில் நடக்கிறது. இதில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட காணொலி அறிக்கை திரையிடப்பட்டது. இந்த உரையிலேயே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அந்த உரையில், இலங்கை கடுமையான தடைகளை எதிர்நோக்குகின்ற போதிலும் மக்களுக்கு பயனளிக்கக் கூடிய ஆக்கபூர்வமான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் வேலைத் திட்டங்களுடன் தொடர்ந்தும் தீவிரமாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபட்டு வருகின்றது.

மனித உரிமைகள் பேரவையின் 46/1, 51/1 தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. இவற்றால் நிறுவப்பட்ட வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையையும் மீண்டும் நிராகரிப்பதாகவும் அமைச்சர் கூறினார். மேலும், இவ்வாறான பொறிமுறைகள் ஆக்க பூர்வமற்றவை - எதிர்மறையானவை -பயனற்றவை மனித உரிமைகள் பேரவை நிறுவப்பட்ட கொள்கைகளுக்கு எதிரானவை - என்றும் சொன்னார்.

பொருளாதார மீட்சி, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் தொடர்பில் நாடு அடைந்த உறுதியான முன்னேற்றம் பற்றிய கண்ணோட்டத்தையும் அவர் தனது உரையில் வெளிப்படுத்தினார். குறுகியகால அரசியல் ஆதாயங்களை விட நாட்டின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் நடைமுறை கொள்கை உள்ளது என்றும் இது விடயத்தில் எட்டப்பட்ட முன்னேற்றம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகரிக்கப்பட்டு - வரவேற்கப்பட்டுள்ளது -என்றார்.

**காசா நெருக்கடி**

**அமில பரிசோதனை!**

காசா எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை அதன் நம்பகதன்மைக்கான ஓர் அமிலப் பரிசோதனையாக அமையும் எனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதேசமயம், கடந்த 26ஆம் திகதி ஆரம்பமான ஜெனிவா கூட்டத் தொடர் எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில், மனித உரிமைகள் ஆணையாளரின் 51/1 வாய்மொழி அறிக்கையை தொடர்ந்து இலங்கையின் அறிக்கையை ஐ. நா. மனித உரிமைகளுக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி ஹிமாலி அருணதிலக வழங்குவார். (ஐ)

## தமிழரினதும்...

'ஐ சயன்ஸ்' என்ற சஞ்சிகையில் இந்த ஆய்வு முடிவு வெளியானது. இந்த ஆய்வை இந்திய, இலங்கை மரபணு நிபுணர்கள் நடத்தியுள்ளனர்.

இந்த ஆய்வு இலங்கையின் இனக் குழுக்களின் வரலாற்று தோற்றம் பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளதுடன், இரு இனங்களுக்கும் இடையிலான சமூக ஊடாட்டங்கள் பற்றிய பல விடயங்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

இரு இனங்களுக்கும் இடையே கலாசார, மொழி வித்தியாசங்கள் இருந்த போதிலும் பல நூற்றாண்டுகளாக இரு இனங்களும் பின்னிப் பிணைந்திருந்தமையே மரபணு ஒற்று மைக்கு காரணம் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

சிங்களவர்களும் தமிழர்களும் 2 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து சென்றவர்கள். சிங்களவர்கள் மேற்கு பகுதியிலிருந்தும் தமிழர்கள் தென்னிந்தியாவில் இருந்தும் ஒரே காலப் பகுதியிலேயே சென்றுள்ளனர் என்றும் ஆய்வு பேராசிரியர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்தியாவின் மேற்கு பகுதியினருக்கும் தென்னிந்திய பகுதி யினருக்கும் இடையேயும் அதிக ஒற்றுமை உள்ளது. எனினும், அதை விடவும் இலங்கை தமிழர்கள், சிங்கள வர்களின் மரபணு ஒற்றுமை அதீதமாக உள்ளது என்றும் ஆய்வு கூறுகிறது. (ஐ)

## இலங்கைக்கு...

றொபேர்ட் பயஸ் ஆகியோருடன் ரவிச்சந்திரன், நளினி ஆகியோர் கடந்த 2022 நவம்பர் 11ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும், இலங்கையர்களான சாந்தன், முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். தம்மை தாயகம் அனுப்பி வைக்குமாறு அவர்கள் அங்கு போராட்டங்களை நடத்தினர்.

இதனிடையே, கல்லீரல் பாதிப்பு காரணமாக கடந்த ஜனவரி 24ஆம் திகதி திருச்சி மருத்துவமனையில் சாந்தன் சேர்க்கப்பட்டார். சிறைச்சாலை உரிமைகள் அமைப்பின் கோரிக்கையை அடுத்து சாந்தன் உயர்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி மருத்துவ மனையில் சாந்தன் சேர்க்கப்பட்டார்.

இதனிடையே, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் தாயாரான மகேஸ்வரி 35 வருடங்கள் காணாத தனது மகனை நாட்டுக்கு அழைத்து வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பலருக்கும் உருக்கமான கோரிக்கையை முன்வைத்தார். அவர் கோரிக்கை மனுக்களை இந்திய, இலங்கை அரசியல்வாதிகள் பலருக்கும் அனுப்பியிருந்தார்.

இதேபோன்று, சாந்தனும் தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இந்திய உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இலங்கை அரசு ஆவணங்களை அனுப்பி வைத்தால் சாந்தனை இலங்கை அனுப்புவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இதையடுத்து அவரின் ஆவணங்கள் இழுபறிகளுக்கு மத்தியில் அனுப்பி வைக்கப்பட்டன. ஆவணங்கள் கிடைத்தமையை தொடர்ந்து சாந்தன் இலங்கை செல்வதற்கான அனுமதியை கடந்த வெள்ளிக்கிழமை இந்திய மத்திய அரசாங்கம் வழங்கியது.

இதனிடையே, கல்லீரல் செயலிழப்பால் சாந்தன் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். நேற்று முன்தினம் கோமா நிலைக்கு சாந்தன் சென்றார். இதைத் தொடர்ந்து நேற்று காலை அவருக்கு மாரடைப்பும் ஏற்பட்டது. அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அது பலனின்றி நேற்று காலை 7.50 மணியளவில் உயிரிழந்தார் என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் குழுவின் தலைமை மருத்துவர் பிறேம்குமார் தெரிவித்தார்.

இதனிடையே, சாந்தனின் உடலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (ஐ)

## மின்சாரக்...

ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் மின்சார கட்டணத்தை 3.34 வீதம் குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை முன்மொழிவை வழங்கியது. இதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்த நிலையில், அந்த முடிவை மீளப் பெற்றிருந்தது.

எனினும் அண்மையில் பாராளுமன்றில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர உரையாற்றிய போது கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட அதே அளவான மின் கட்டணத்தை - 18 சதவீதம் குறைக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 66 சதவீதத்தால் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டது. பின்னர், ஒக்ரோபர் மாதத்தில் 18 சதவீதத்தால் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடந்து வந்த...

*1999 ஒக்ரோபர் 10* - மரண தண்டனை பெற்ற நால்வரும் ஆளுநருக்கு கருணை மனு அனுப்பினர்.

*2000 ஏப்ரல் 26* - நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டதை அடுத்து மீதமிருந்த மூவரும் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினர்.

*2000 - 2007* வரை கருணை மனுவை ஜனாதிபதிகளாக இருந்த கே. ஆர். நாராயணன், ஏ. பி. ஜே. அப்துல் கலாம் ஆகியோர் கிடப்பில் போட்டனர்.

*2011 ஒகஸ்ட் 12 - 11* ஆண்டுகள் கிடப்பில் இருந்த கருணை மனு நிராகரிக்கப்பட்டதாக ஜனாதிபதி பிரதீபா பட்டேல் அறிவித்தார்.

*2014 பெப்ரவரி 18* - சாந்தன் உள்ளிட்ட மூவரின் மரண தண்டனை உச்ச நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது.

*2014 பெப்ரவரி 18* - ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றுவரும் சாந்தன் உள்ளிட்ட 7 பேரும் விடுதலை செய்யப்படுகின்றனர் என்று தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

*2014 பெப்ரவரி* - தமிழ்நாடு அரசின் முடிவுக்கு தடை ஆணை பெறப்பட்டது. அத்துடன், மத்திய அரசின் அனுமதியின்றி அவர்களை விடுதலை செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

*2014 ஏப்ரல் 25* - மத்திய - மாநில அரசுகளின் அதிகாரம் சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் அரசியல் சாசன அமர்வுக்கு வழக்கு மாற்றப்பட்டது.

*2016 மார்ச் 02* - சாந்தன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்யுமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பியது.

*2018 செப். 06* - 7 பேரையும் விடுவிப்பது குறித்து ஆளுநரை முடிவெடுக்க அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது.

*2018 செப். 09* - 7 பேரையும் விடுதலை செய்ய பழனிசாமி தலைமையிலான தமிழக அரசு பரிந்துரை அனுப்பியது.

*2022 மே 28* - பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டார்.

*2022 நவம்பர் 12* - சாந்தன், உள்ளிட்ட 6 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். அன்றைய தினமே இலங்கையர்களான சாந்தன், முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் உள்ளிட்டோர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

*2024 ஜனவரி 24* - உடல்நலக் குறைவால் சாந்தன் திருச்சி மருத்துவமனையில் அனுமதி. பின்னர் அவர் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

*2024 பெப். 15* - சாந்தன் இலங்கை வருவதற்கான ஆவணங்கள் இந்திய தூதரகத்துக்கு கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது.

*2024 பெப். 23* - சாந்தன் இலங்கை செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

*2024 பெப். 28* - இரவு சாந்தன் இலங்கை திரும்பவிருந்த நிலையில், காலை 7.50 மணியளவில் காலமானார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## தமிழரசு கூட்டம் ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், பெப். 29

தமிழரசுக் கட்சிக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் அரசியல் உயர்பீட கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள தாயகம் அலுவலகத்தில் நேற்று குறித்த கூட்டம் இடம்பெறவிருந்த நிலையிலேயே திகதியிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதாக கட்சியின் முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார்.

கட்சியின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரனின் தாயார் மரணமடைந்தமை காரணமாகவே இக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புலிபாய்ந்த கல் பகுதிக்கு சென்ற அமைச்சர் டக்ளஸ்

### சட்டவிரோதமான கடற்றொழில் நடவடிக்கைகளை பார்வையிட்டார்



முல்லைத்தீவு, பெப். 29

முல்லைத்தீவு மாவட்டத்தின் புலிபாய்ந்த கல் பகுதிக்கு விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு இடம்பெற்று வரும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக தகவலறிய பல்வேறு இடங்களுக்கு சென்று பார்வையிட்டார்.

புலிபாய்ந்தகல் பகுதியில் அண்மைக் காலமாக சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட தென்பகுதியில் இருந்து மீனவர்கள் வருகை தந்து வாடி அமைத்து மீன் பிடித்து வருகின்றனர்.

இதன்போது அப்பகுதியில் உள்ள தமிழ் மீனவர்களுக்கும் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது.

இந்நிலையில், குறித்த பகுதியை பார்வையிட்ட அமைச்சர், அத்துமீறி வாடியமைத்து மீன் பிடிக்க யாருக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

## ஜனாதிபதி தேர்தலில் ரணில் களமிறங்குவார்

### உறுதிப்படுத்தினார் ஹரின்

கொழும்பு, பெப். 29

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார். இதனை நான் உறுதியாகவே கூறுகின்றேன் - என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

“ தர்தல்கள் நடத்தப்படும் எனக் கூறப்பட்டாலும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக எதையும் இன்னும் கூறவில்லையே” என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ரணில் விக்கிரமசிங்க அரசியல் இராஜதந்திரம் தெரிந்தவர். பதற்றப்படமாட்டார். உரிய நேரத்துக்கு உரிய வகையில் வருவார். அது குறித்து எவரும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை.

மே முதலாம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி பாரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது. அப்போது பலர் எம்முடன் மேடையேறுவார்கள். இது அரசியலில் திருப்பமாக அமையும் - என்றார். (அ)

# சட்டப்படி நடந்த கொலை!

### சாந்தனின் மரணம் குறித்து சீமான்



சென்னை, பெப். 29

**இது ஒரு கொலை. இதனை ஒரு சட்டப்படி இடம்பெற்ற கொலை என்றுதான் தெரிவிக்க வேண்டும் என சாந்தனின் மரணம் குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.**

**சாந்தனின் உடலிற்கு அஞ்சலி செலுத்திய பின்னர் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறப்பு முகாம் என்றால் அது சிறப்பு முகாம் ஆகிவிடுமா. அது ஒரு வதைமுகாம் .

அதில் போய் சாந்தனை அடைத்துவைத்திருந்தார்கள். இரத்த உறவுகள் தவிர வேறு யாரும் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மனுக் கொடுத்து பார்க்கமுடியாது. நான் கூட மனு கொடுத்து போய்பார்க்க முடியாது.

நீங்கள் இங்குவைத்து விடுதலை செய்யவில்லை என்றால் பொதுச் சிறையிலாவது அடைத்து வையுங்கள் என கேட்டோம்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பேரறிவாளன், நளினி போன்றவர்கள் வெளியே உள்ளனர். எங்கு இருக்கின்றார்கள் என்பது தெரியாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். நாங்கள் அவர்கள் தாய் தந்தையிடம் கேட்கவேண்டும் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என. அவ்வாறான வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

ரொபேர்ட் பயஸை இரண்டு மாதங்கள் சிறை விடுவிப்பில் விடுவித்தீர்கள். சமூகத்திற்கு சட்டமொழுங்கிற்கு கேடு விளைவிக்கும் விதத்தில் அவர் நடந்துகொண்டாரா? பேரறிவாளனிற்கு கொடுக்கப்பட்ட தீர்ப்புதான் அனைவருக்கும் என நீதிபதிகள் தெரிவித்துவிட்டனர். அப்படி எனும் போது அவர்கள் தங்கள் நாட்டுக்கு செல்வதற்கு நீங்கள் அனுமதித்திருக்கவேண்டும்.

சாந்தனுடைய கடைசி விருப்பம் தாயை பார்த்து ஒருவாய் சோற்றை அவர் கையால் சாப்பிடவேண்டும் என்பதுதான். அதைக்கூட நிறைவேற்றி வைக்கமுடியவில்லை. இது ஒரு சட்டக்கொலை. அவ்வளவு தான். நியாயமாக இது ஒரு கொலை. இதனை ஒரு சட்டப்படி இடம்பெற்ற கொலை என்றுதான் தெரிவிக்கவேண்டும்-என்றார். (அ)

# இலங்கை தமிழ் அரசு கட்சியின் காலம் முடிவுக்கு வந்துவிட்டது!

### சுரேஷ் பிறேமச்சந்திரன் சொல்கிறார்

கிளிநொச்சி, பெப். 29

தமிழ் அரசுக் கட்சியின் காலம் என்பது முடிவுக்கு வந்துவிட்டது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த 2017ம் ஆம் ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டது.

இப்பொழுது தமிழரசுக் கட்சிக்குள் தலைமை பதவிக்கான போட்டி நடக்கின்றது. அது உண்மையாகவே எம்மைப் பொறுத்த வரையில் அது ஓர் உட்கட்சி சம்பந்தமான விவகாரமாக அமைந்திருக்க வேண்டும். ஆனால், அது பூதாகாரப்படுத்தி இன்று அது நீதிமன்றம் வரை சென்ற ஒரு விடயமாக மாற்றப்பட்டிருக்கிறது.

தமிழ் அரசுக் கட்சி இல்லாவிட்டால் எஞ்சியது இல்லை என்ற ஒரு படம் காட்டப்படுவது போன்ற சூழல்தான் காட்டப்பட்டிருக்கிறது. எங்களை பொறுத்த வரையில் தமிழ் அரசுக் கட்சி மிகமிக பலவீனமான சூழ்நிலைக்குள் சென்றுவிட்டது.

ஆகவே, தமிழ் அரசுக் கட்சியும் கூட சுருங்கிப் போயிருக்கிறது என்பதை தமிழ் அரசுக் கட்சியில் இருக்கிறவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் தாய் கட்சி என்றோ அல்லது நாங்கள் பெரிய கட்சி என்றோ வாதிடுவது மாத்திரமல்ல அங்கு ஒரு தலைமைப் பதவி என்ற ஒரு போட்டிகூட இருக்கிறது.

எங்களை பொறுத்த வரையில் தமிழ் அரசுக் கட்சியின் காலம் என்பது முடிவுக்கு வந்துவிட்டதாக தெரிகிறது - என்றார். (ஐ)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்




யாழ்ப்பாணம், பெப். 29

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக் கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நேற்றும் இன்றும் வேலைநிறுத்தமும் கவனயீர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கமைய யாழ்.பல்கலைக் கழகத்திலும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர் சங்கத்தின் நேற்று முற்பகல் 11 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்னைகளுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டத்தின்போது ஊழியர்களின் ஓய்வூதிய நிதிகளை கொள்ளையடிக்காதே, அரச பல்கலைக்கழக முறைமையை காப்பாற்று, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு ஏற்ப சம்பள அதிகரிப்பை வழங்கு, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிணக்குகளுக்கு தீர்வை வழங்கு உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



இருபது - 20 போட்டி:

# நமீபிய வீரர் அதிவேக சதம்

காத்மண்டு, பெப். 29

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் அதிவேக சதம் விளாசி அசத்தியுள்ளார் நமீபியா நாட்டு கிரிக்கெட் வீரர் ஜேன் நிக்கோல் லோப்டி-ஈடன். 33 பந்துகளில் அவர் சதம் பதிவு செய்து இந்த சாதனையை படைத்துள்ளார். இதன் மூலம் குஷன் மலாவின் 34 பந்துகள் சாதனையை முறியடித்துள்ளார்.

நேபாளத்தில் நேபாளம், நெதர்லாந்து, நமீபியா அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இந்த மூன்று அணிகளும் வரும் ஜூன் மாதம் அமெரிக்காவில் நடைபெறவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ளன.

இந்த நிலையில், இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் 2 முறை பலப்பரீட்சை செய்யும். அதிக வெற்றிகளை பதிவு செய்யும் முதல் இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் விளையாடும்.

இந்த தொடரின் முதல் போட்டியில் நமீபியா - நேபாளம் அணிகள் நேற்று முன்தினம் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற நமீபியா அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 206 ஓட்டங்கள் எடுத்தது. 10.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 62 ஓட்டங்கள் எடுத்திருந்த சூழலில் துடுப்பெடுத்தாட வந்தார் ஜேன் நிக்கோல் லோப்டி-ஈடன். தொடக்கம் முதலே அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். மலானுடன் இணைந்து 135 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தார். 33 பந்துகளில் சதம் கடந்து சாதனை படைத்தார். 11 பௌண்ட்ரிகள் மற்றும் 8 சிக்ஸர்களுடன் இந்த சதத்தை அவர் தொட்டார்.

22 வயதான அவர் இடது கை துடுப்பாட்ட வீரர். 33 சர்வதேச இருபது - 20, 36 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். இது தான் அவர் பதிவு செய்துள்ள முதல் சதமாகும். இந்தப் போட்டியில் நேபாள அணி 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

# டெஸ்ட் வேட்கை உள்ள வீரருக்கு வாய்ப்பளிப்பு

ரோஹித் சர்மா

ராஞ்சி, பெப். 29

அணித் தெரிவை பொறுத்த வரை எந்த வீரருக்கு டெஸ்ட் கிரிக்கெட் மீது வேட்கை இருக்கிறதோ, அவருக்குத்தான் வாய்ப்பளித்து வருகிறோம் என்று இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா கூறியுள்ளார்.

கோலி உள்ளிட்ட மூத்த மற்றும் முன்னணி இளம் வீரர்கள் ஐ. பி. எல். காரணமாக டெஸ்ட் போட்டியை புறக்கணிக்கிறார்கள் என்று விமர்சனம் எழுந்துள்ள நிலையில் ரோஹித் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், “டெஸ்ட் கிரிக்கெட் தான் கடினமான வடிவம். எனவே, கடினமான டெஸ்ட் போட்டிகளில் சோபிக்க வேண்டும் என்றால் அதற்குரிய தாகமும் வேட்கையும் இருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி பெற முடியும். எந்த வீரருக்கு இந்த தாகம் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் வாய்ப்பு வழங்குகிறோம். எந்தெந்த வீரர்களுக்கு அந்த வேட்கை உள்ளது அல்லது யாருக்



கெல்லாம் இல்லை என்பது சுலபமாகத் தெரிந்து விடும். இந்த இடத்தில் இருக்க விரும்பாத வீரர்களை நாங்கள் எளிதில் கண்டுபிடித்து விடுவோம். எங்களுக்கு எளிதில் தெரிந்து விடும்.

எந்த வீரருக்கு அந்தத் தாகம் உள்ளதோ, எந்த வீரர் இங்கு நீடித்து ஆட விரும்புகிறாரோ, கடினமான சூழ்நிலைகளில் ஆட விரும்புகிறார்களோ அவர்களுக்கே அணித்தேர்வில் முன்னுரிமை அளிக்கிறோம். ஆகவே விஷயம் எளிதானது. யார் யாரிடம் அந்த வேட்கை இல்லையோ அவர்களை இந்த இடத்திற்கு தெரிவு செய்து ஆடவைப்பது விரயமான காரியம். இப்போது உள்ள அணியில் அது போல நீடித்து ஆடக்கூடிய வேட்கை உள்ளவர்கள்தான் ஆடுகின்றனர். இப்போது அணிக்குள் வந்தவர்கள் இந்த வடிவத்தில் நீடித்து ஆடப்போகிறவர்கள்”- என்றும் கூறினார். (ஐ)

# ஐ. பி. எல். தொடரிலும் விராட் கோலி விலகலாம்!

மும்பை, பெப். 29

ஐ. பி. எல். தொடரில் இருந்தும் பிரபல வீரர் விராட் கோலி விலகலாம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணியில் இடம் பிடித்திருந்த விராட் கோலி தனிப்பட்ட காரணங்களுக்காக விலகினார். அவர் எதற்காக விலகினார் என்பது கேள்விக்குறியாக இருந்தது. இது குறித்து பல வதந்திகள் பரவிய நிலையில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது தெரிய வந்தது. இதனை தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டு வதந்திகளுக்கு விராட் கோலி முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்நிலையில், வரும் ஐ. பி. எல். தொடரில் இருந்தும் விராட் கோலி விலகலாம் என இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

“இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து விலகியது போல, ஐ.பி.எல் 2024 தொடரிலும் விராட் கோலி விலகலாம்”, என்று கவாஸ்கர் கூறினார்.

விராட் கோலி ஆரம்பம் முதல் ஐ. பி. எல்லில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# இறுதிப் போட்டியிலும் ராகுல் அணியில் இல்லை!

மும்பை, பெப். 29

இங்கிலாந்துக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியிலும் கே. எல். ராகுல் இடம்பெற மாட்டார் என்று கூறப்படுகின்றது.

இங்கிலாந்து அணி இந்தியா சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 3-1 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி மார்ச் 7ஆம் திகதி தர்மசாலாவில் தொடங்குகிறது. இதிலும் இந்திய அணியின் முன்னணி வீரரான கே. எல். ராகுல் இடம் பெறுவது சந்தேகம் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆடிய ராகுல் காயம் காரணமாக அதன் பின்னர் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் ஆடவில்லை. இதனிடையே, ராகுல் காயத்துக்கு சிகிச்சை பெற லண்டன் செல்லவுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# மீண்டும் தந்தையான கேன் வில்லியம்ஸன்!



வெலிங்டன், பெப். 29

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான கேன் வில்லியம்சன் மூன்றாவது முறையாக தந்தையானார். வில்லியம்சன் - சாரா ரஹீம் தம்பதிக்கு மூன்றாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளது.

வில்லியம்சன் தனது மனைவி சாரா ரஹீம் மற்றும் புதிதாக பிறந்த மகளுடன் இருக்கும் படத்தைத் தனது இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து கொண்டு இந்த மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டுள்ளார். இதுகுறித்து அந்த பதிவின் தலைப்பில் ” இந்த உலகத்தில் அழகான பெண்ணை வரவேற்கிறோம்” என தெரிவித்தார்.

கேன் வில்லியம்சன் - சாரா ரஹூமுக்கு ஏற்கனவே இரண்டு பிள்ளைகள் உள்ளனர். கேன் வில்லியம்சன் - சாரா ரஹூம் தம்பதிக்கு 2019இல் ஒரு பெண் குழந்தையும், 2022 இல் ஆண் குழந்தையும் பிறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட்; கொன்வே விலகல்!

வெலிங்டன், பெப். 29

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலிருந்து நியூசிலாந்து அணியின் டெவன் கொன்வே விலகியுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்து சென்று 2 டெஸ்ட் மற்றும் 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது.

இதில் முதலில் நடைபெற்ற இருபது - 20 தொடரை 3-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது. இதையடுத்து இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று புதன்கிழமை வெலிங்டனில் தொடங்குகிறது.

இந்நிலையிலேயே நியூசிலாந்தின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான டெவன் கொன்வே விலகியுள்ளார்.

ஆஸிக்கு எதிரான இருபது - 20 போட்டியில் இடது



கையில் அவர் காயமடைந்தார். இது இன்னும் குணமாகாத நிலையிலேயே முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து அவர் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக ஹென்றி நிக்கோல்ஸ் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார். (ஐ)

# இந்தியா கைவிட்ட திட்டத்தை ஈரான் பாகிஸ்தானுடன் இணைந்து நிறைவேற்ற காரணம் என்ன?

சமீபத்தில், ஈரானில் இருந்து பாகிஸ்தானுக்கு எரிவாயு வழங்கும் திட்டத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், ஈரான் எல்லையில் இருந்து பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தானின் கடலோர நகரமான குவாடர் வரை குழாய் பதிக்க பாகிஸ்தான் அரசின் எரிசக்திக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த எரிவாயு குழாய் திட்டத்தின் கீழ் ஈரான் எல்லையில் இருந்து குவாதார் வரை குழாய் பதிக்க பாகிஸ்தான் ஒப்புதல் அளித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஒன்றரை மாதங்களுக்கு முன்பு, ஈரான் பாகிஸ்தானுக்குள் குண்டுகளை வீசியதால், பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ஈரானுக்குள் பாகிஸ்தானும் தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானின் பதிலடித் தாக்குதலுக்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையே தூதரக மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்ததால் பதற்றம் குறைந்தது.

ஈரான்-பாகிஸ்தான் எரிவாயு குழாய் திட்டம் ஒரு பழைய திட்டம். பாகிஸ்தான் மக்கள் கட்சி அரசாங்கத்தின் கடைசி நாட்களில் 2013-இல் ஈரானுக்கு சென்றிருந்த அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியால் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், அதன் பிறகு இந்த திட்டத்தில் குறிப்பிடத்தக்க பணிகள் எதுவும் செய்ய முடியவில்லை.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (நவாஸ்) மற்றும் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன் சாஃப் ஆகியவற்றின் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் நடக்கவில்லை.

பாகிஸ்தான் ஜனநாயக இயக்கதின் (பி.டி.எம்) அரசாங்கத்தின் போது, பிரதம மந்திரி ஷாபாஸ் ஷெரீப் ஜனவரி 2023-இல் இந்தத் திட்டத்தில் பணியாற்றுவதற்காக ஒரு குழுவை அமைத்தார்.

இப்போது, ஒரு வருடத்திற்கு பின், அரசாங்கத்தின் எரிசக்திக்கான அமைச்சரவைக் குழு இந்தத் திட்டத்தின் ஒரு பகுதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த திட்டத்திற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்தது. அதற்கு ஈரான் மீது விதிக்கப்பட்ட சர்வதேச தடைகள் தான் காரணம்.

இருப்பினும், இப்போது பாகிஸ்தான் ஒரு பகுதியில் குழாய் பதிக்க ஒப்புதல் அளித்துள்ளதால், இந்த திட்டத்தில் வேலை செய்யாததற்காக சர்வதேச அமைப்புகள் மூலம் ஈரான் பாகிஸ்தானுக்கு விதிக்கக்கூடிய அபராதத்தை தவிர்க்க முடியும்.

**ஈரான்-பாகிஸ்தான் எரிவாயு குழாய் திட்டம் என்றால் என்ன?**

ஈரான்-பாகிஸ்தான் எரிவாயு குழாய் திட்டத்தின் கீழ் ஈரான் எல்லையில் இருந்து கடலோர நகரமான குவாதர் வரை குழாய் பதிக்க பாகிஸ்தான் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பாகிஸ்தானின் பெட்ரோலிய அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் ஜி.ஏ. சப்ரி இந்த திட்டத்தில் பணியாற்றியுள்ளார்.



1990-களில் பெனாசிர் பூட்டோவின் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டதாக அவர் கூறினார். முன்னதாக இந்தத் திட்டம் ஈரான்-பாகிஸ்தான் - இந்தியா எரிவாயு குழாய் திட்டமாக இருந்தது.

பின்னர் இந்த திட்டத்தில் இருந்து இந்தியா வெளியேறியது. இதற்குக் காரணம் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள். சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ் இருந்ததால் இது அவ்வளவு பெரிய பிரச்னை இல்லை.

உண்மையில், ஈரானிடம் இருந்து பெறும் எரிவாயுவின் விலையை பாகிஸ்தான் முதலில் தீர்மானிக்க வேண்டும், அதன் பிறகு அந்த திட்டம் செயல்படுத்தலாம் என்று இந்தியா விரும்பியது, ஆனால் அது நடக்கவில்லை. அதன் பிறகு இந்த திட்டத்தில் இந்தியா பங்கேற்க மறுத்து, வெளியேறியது.

இஸ்லாமாபாத்தில் உள்ள எரிசக்தி துறையின் மூத்த பத்திரிகையாளர் காலிக் கயானி, இந்த திட்டத்தைப் பற்றி நீண்ட காலமாக எழுதி வருகிறார். இந்த திட்டத்தின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி ஆசிப் சர்தாரியுடன் ஈரானுக்கான தூதுக்குழுவில் அவரும் ஒரு பகுதியாக இருந்தார்.

காலிக் கயானி, இந்தத் திட்டம் குறித்த விவாதங்கள் முதன்முதலில் 1990-களில் தொடங்கியதாகக் கூறினார்.

பின், 2000-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டன என்றார். அதற்குப் பிறகு, 2013-இல், அப்போதைய அதிபர் சர்தாரி மற்றும் ஈரான் அதிபர் அஹ்மதி நிசாத் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியா வெளியேறியதற்கான காரணங்களை விவரித்தார் காலிக் கயானி. “இந்தியாவும் தனக்கான எரிவாயு விநியோகம் பாகிஸ்தானில் இருந்து வரும் என்பதை உணர்ந்து கொண்டது. பாகிஸ்தான் அதை எந்த நேரத்திலும் நிறுத்தலாம், எனவே இந்தியா இந்த திட்டத்தை விட்டு வெளியேறியது. அதன் பிறகு அது ஈரான்-பாகிஸ்தான் எரிவாயு குழாய் திட்டமாக மாறியது,” என்றார்

பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டபோது, ஈரான் பெரும்பாலான குழாய்களை சொந்தமாக அமைத்ததாக காளிக் கயானி கூறினார். அப்போது, பாகிஸ்தான் எல்லையில் இருந்து 70-80 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணிகள் நிலுவையில் இருந்தன.




**திட்டம் முடங்கியதற்கான காரணம் என்ன?**

மார்ச் 2013-இல், அப்போதைய பாகிஸ்தான் மற்றும் ஈரான் அதிபர்கள் இத்திட்டத்தை துவக்கி வைத்த பிறகு, இத்திட்டத்தின் பணிகளில் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்த திட்டத்தின் பணிகள் நிறுத்தப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் ஈரான் மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் என்றும், ஆனால் இதைத் தவிர வேறு சில நாடுகளும் இந்தத் திட்டம் நடைபெறுவதை விரும்பவில்லை என்பதும் உண்மை என்றார் ஜிஏ சபரி.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (நவாஸ்) மற்றும் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன் சாப் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று காலிக் கயானி கூறினார்.

அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியாவுடன் சிறந்த உறவைப் பேண வேண்டும் என்ற இரு அரசாங்கங்களின் கொள்கையே இதற்குக் காரணம். இந்த திட்டத்திற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்தது.

ஈரான் மீதான சர்வதேச தடைகள் காரணமாக, அதன் எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளதாக காலிக் கூறினார். அதனால், இந்தத் திட்டத்தில் பணிபுரியும் நிறுவனமும் பொருளாதாரத் தடைகளுக்கு இலக்காக வேண்டியிருக்கும்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் அமைச்சரவைக் குழுவும் இது தொடர்பாக சர்வதேச சட்ட நிறுவனமான ‘வில்கி ஃபார் ரூ கல்லாஹ’ரிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுள்ளது என்பதை நினைவில் கொள்ளலாம். இரானுடன் இணைந்து இந்த திட்டத்தில் பணிபுரியும் நிறுவனம் சர்வதேச தடைகளை சந்திக்க நேரிடும் என்று கூறினார் காலிக்.

**ஈரான் குழாய் பதிக்க பாகிஸ்தான் ஒப்புதல் அளித்தது ஏன்?**

இந்த ஆண்டு ஜனவரி மாதம், பாகிஸ்தான் எல்லைக்குள் ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதால், பாகிஸ்தான் மற்றும் ஈரான் இடையேயான உறவில் பதற்றம் ஏற்பட்டது. தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக ஈரான் கூறியுள்ளது.

ஈரானின் தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தானும் இரானுக்குள் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது, அதில் பயங்கரவாதிகளை கொன்றதாகக் கூறியது.

இரு தரப்பிலிருந்தும் தாக்குதலுக்குப் பிறகு இராஜதந்திர மட்டத்தில் இந்த பிரச்னை தீர்க்கப்பட்டது, ஆனால் இந்த பதற்றத்திற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு, இரு நாடுகளுக்கு இடையிலான எரிவாயு குழாய் திட்டத்திற்கு பாகிஸ்தான் ஒப்புதல் அளித்துள்ளது ஒரு முக்கியமான முன்னேற்றம்.

இது குறித்து காலிக் கயானி கூறுகையில், இந்த அனுமதி திடீரென வழங்கப்படவில்லை என்றும், அதற்கான பணிகள் பல மாதங்களாக நடைபெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் காரணமாக, இந்தத் திட்டத்தில் பணிபுரியும் எந்த நிறுவனமும் தடைசெய்யப்படலாம், எனவே இப்போது இந்தத் திட்டத்தின் பணிகளை இண்டர் ஸ்டேட் கேஸ் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் செய்யும் என்று அவர் கூறினார். இந்த நிறுவனம் பாகிஸ்தானின் பெட்ரோலிய அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

இந்த நிறுவனத்திற்கு சர்வதேச அனுபவம் இல்லை என்றார். அதாவது வெளியில் இருந்து எந்தப் பொருளையும் இறக்குமதி செய்யவில்லை.

எரிவாயு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 50,000 கோடி ரூபாய் உள்ளது, அதன் மூலம் இதற்கான பணிகள் தொடங்கப்படும் என்றார் காலிக் கயானி.


ஈரான் எல்லையில் இருந்து குவாதர் வரை அமைக்கப்படும் எரிவாயு குழாய் 158 மில்லியன் டாலர்கள் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் அடுத்தடுத்து அமைச்சர்களை வளைக்கும் வழக்குகள் - திமுக என்ன செய்யப் போகிறது?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

அமலாக்கத் துறை சோதனைகள் ஒருபுறமிருக்க, நீதிமன்றங்களிலும் தி.மு.க. அமைச்சர்கள் மீதான வழக்குகள் தீவிரமடைந்திருக்கின்றன. இதனை எப்படி எதிர்கொள்ளப் போகிறது தி.மு.க.?







### ஐ.பெரியசாமி மீதான வழக்கு என்ன?

தற்போதுள்ள தி.மு.க. அரசில் இடம்பெற்றுள்ள பல்வேறு அமைச்சர்கள் மீதான வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் தானாகவே முன்வந்து விசாரித்துவரும் நிலையில், அமைச்சர் ஐ. பெரியசாமி மீதான முறைகேடு வழக்கில் அவர் விடுவிக்கப்பட்டதை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

தமிழ்நாட்டின் தற்போதைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, 2006-2011 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்து வந்தார். 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம், அப்போதைய முதலமைச்சர் மு. கருணாநிதியின் பாதுகாப்பு அதிகாரியான சி. கணேசன் என்பவர் வீட்டு வசதி வாரியத்திற்கு மனு ஒன்றை அளித்தார்.

அந்த மனுவில், தான் ஒரு வாடகை வீட்டில் வசிப்பதாகவும் அதற்கு பெரிய அளவில் வாடகை செலுத்தி வருவதால் தனக்கு வீட்டு மனை ஒன்றை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தார். அவருடைய மனு 2008ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, 'குறைபற்ற, நேர்மையான" அரசு அதிகாரி என்ற வகையில் சென்னையில் வீட்டு வசதி வாரியத்தின் உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு மனை ஒன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு மார்ச் 10ஆம் தேதியே அமைச்சரின் ஒப்புதல் பெறப்பட்டது.

ஆனால், அவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்பு ஒன்றில் 1,180 ரூபாய் வாடகைக்கு குடியிருந்தது விசாரணையில் தெரியவந்தது.

### சிறப்பு நீதிமன்றத்தால் ஐ.பெரியசாமி விடுவிப்பு

2011ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தமிழக லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்தது. 2012ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி சபாநாயகர் பி. தனபால் இது தொடர்பாக வழக்குத் தொடர அனுமதி அளித்தார். ஆனால், இந்த வழக்கிற்கு ஆளுநர்தான் அனுமதி தர வேண்டுமே தவிர, சபாநாயகர் அல்ல என்றும் வேறு சில விஷயங்களையும் குறிப்பிட்டு தன்னை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என ஐ. பெரியசாமி வழக்குத் தொடர்ந்தார்.

எம்.பி., எம்.எல்.ஏக்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் 2016 ஜூலை 6ஆம் தேதி இந்த மனுவைத் தள்ளுபடி செய்தது. 2022 நவம்பரில் சென்னை உயர்நீதிமன்றமும் டிசம்பரில் உச்சநீதிமன்றமும் இந்தத் தீர்ப்பை உறுதிசெய்தன. 2023 பிப்ரவரி 21ஆம் தேதி சிறப்பு நீதிமன்றத்தில் மீண்டும் ஒரு வழக்கைத் தொடர்ந்தார் ஐ. பெரியசாமி. அந்த வழக்கில் தன் மீதான வழக்கிற்கு ஆளுநரே அனுமதி அளிக்க வேண்டும் என்று மீண்டும் வாதத்தை முன்வைத்தார் ஐ. பெரியசாமி. இந்த முறை இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட சிறப்பு நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுவித்து 2023 மார்ச் 17ஆம் தேதி தீர்ப்பளித்தது.

### வழக்கை மீண்டும் விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

இந்த நிலையில், இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து கடந்த ஆண்டு செப்டம்பரில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இந்த வழக்கின் இறுதிக்கட்ட விசாரணை கடந்த திங்கட்கிழமையன்று நடந்த போது அமைச்சரின் சார்



பில் ஆஜரான வழக்கறிஞர் ரஞ்சித் குமார், இதுபோன்ற வழக்குகளில் போதுமான காரணங்கள் இல்லையென விசாரணை நீதிமன்றம் கருதினால், வழக்கை ரத்து செய்ய அந்நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு என வாதாடினார். அமைச்சர் விதிமுறைகளின்படியே வீட்டு மனையை ஒதுக்கீடு செய்திருப்பதால் அவர் மீது வழக்குத் தொடர எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் கூறினார். இது போன்ற சிறப்பு நீதிமன்றங்களின் விடுவிப்பு உத்தரவை உச்ச நீதிமன்றம் பல முறை அங்கீகரித்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் திங்களன்று தீர்ப்பளித்தார். அமைச்சர் ஐ. பெரியசாமி உள்ளிட்ட மூவர் மீதான இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்றும் இந்த வழக்கை தினமும் நடத்த வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். யாராவது வழக்கை இழுத்தடிக்க முயற்சி செய்தால் அவர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் வழக்கு விசாரணையின் முன்னேற்றத்தை அவ்வப்போது சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### அமைச்சர்களை வளைக்கும் வழக்குகள்

கடந்த சில மாதங்களில் மத்திய சட்ட அமைப்புகள், நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகளின் மூலம் பின்னடைவைச் சந்திக்கும் மூன்றாவது தமிழக அமைச்சர் ஐ. பெரியசாமி. இதற்கு முன்பாக, மதுவிலக்கு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, முந்தைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து துறை பணியிடங்களை நிரப்புவதற்கு பணம் பெற்றுக்கொண்டது தொடர்பான குற்றச்சாட்டில் அமலாக்கத் துறையால் கைதுசெய்யப்பட்டார். தற்போதுவரை ஜாமீன் கிடைக்காத நிலையில், அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.



இதற்கு அடுத்தபடியாக, சொத்துக் குவிப்பு வழக்கில் உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடிக்கும் அவரது மனைவி விசாலாட்சிக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ. 50 லட்சம் அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதையடுத்து அவரது அமைச்சர் பதவி பறிபோனது.

இதுதவிர, தற்போதைய வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, முன்னாள் அமைச்சர் கே. பொன்முடி ஆகியோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்குகளில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து தானாக முன்வந்து வழக்கு பதிவுசெய்து விசாரித்து வருகிறார் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ்.

இதில் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மீதான சொத்துக் குவிப்பு வழக்குகளை லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை முடித்துக் கொள்ள முடிவுசெய்ததை எதிர்த்து, வழக்கை விசாரிக்கிறது நீதிமன்றம். பொன்முடி வழக்கைப் பொறுத்தவரை, அந்த வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து, வழக்கை விசாரிக்கிறது நீதிமன்றம்.

கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு வழக்குகளில், ஆட்சி மாற்றத்தின் பிறகு லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை வழக்கை முடித்துக் கொள்ள முடிவு செய்ததால்தான், வழக்குகளில் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர். லஞ்ச ஒழிப்புத் துறை அப்படி முடிவு செய்தது சரியா என்பது குறித்தும் லஞ்ச ஒழிப்புத் துறையின் முடிவை சிறப்பு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது சரியா என்பதையும் தான் விசாரிக்கப் போவ தாக அறிவித்திருக்கிறார் ஆனந்த் வெங்கடேஷ்.

### திமுகவுக்கு எந்த அளவுக்கு நெருக்கடி தரும்?

இதுபோல வழக்குகள் வரிசை கட்டுவது தி.மு.கவை எந்த அளவுக்கு எந்த அளவுக்கு நெருக்கடியை அளிக்கும்?

"கண்டிப்பாக தி.மு.கவுக்கு இது மிகப் பெரிய நெருக்கடிதான். பொதுவாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குகளில் இல்லாத பல விஷயங்கள் இந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளன. வழக்கில் தாமதம் செய்தால், ரிமாண்ட் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஒரு லட்ச ரூபாய் பிணையாக செலுத்த வேண்டும் சொல்லப்பட்டுள்ளது. இதுபோல கேள்விப்பட்டதில்லை.

மற்றொரு பக்கம், தங்கள் மீது நீதிபதி தாமாக முன்வந்து வழக்குப் பதிவுசெய்ததை எதிர்த்து தி.மு.க. அமைச்சர்கள் தொடர்ந்த வழக்குகளில், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி முடிவு செய்யலாம் என உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால், முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி மீதான வழக்கில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதை எப்படிப் புரிந்து கொள்வதெனத் தெரியவில்லை" என்கிறார் மூத்த பத்திரிகையாளரான குபேந்திரன்.



ஆனால், இது நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவை நிச்சயம் பாதிக்காது என்கிறார் அவர். "தமிழ்நாட்டில் வழக்குகளில் சிக்கியவர்களை எம்.எல்.ஏக்களாகவும் முதலமைச்சராகவுமே மக்கள் தேர்வு செய்திருக்கிறார்கள். இதெல்லாம் தேர்தல் முடிவுகளைச் சுத்தமாகப் பாதிக்காது" என்கிறார் அவர்.

### திமுக என்ன செய்யப் போகிறது?

இதுபோன்ற விவகாரங்களால் தி.மு.கவின் பெயரைக் கெடுக்க முடியாது என்கிறார் தி.மு.கவின் செய்தித் தொடர்பாளரான கான்ஸ்டன்டைன்.

"இந்த வழக்குகளை ஆனந்த் வெங்கடேஷ் முதன்முதலில் எடுத்துக்கொண்ட போதே, அதற்கு தலைமை நீதிபதி ஒப்புதல் அளிக்கவில்லை. ஞநந என்று மட்டும் தான் எழுதியிருந்தார். இருந்த போதும் வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பட்டியலிடப்பட்டன. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகுதான் இவரே விசாரிக்கும்படி கூறப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் இவ்வளவு அவசரத்துடன் இந்த வழக்குகளை ஏன் எடுத்துக்கொண்டனர்?

ஒரு பக்கம் அமலாக்கத் துறை போன்ற மத்திய அரசின் ஏஜென்சிகள் தி.மு.கவைக் குறிவைக்கின்றன. இன்னொரு பக்கம் நீதிமன்றமும் இதில் ஈடுபடுத்தப்படுகிறதோ என்ற சந்தேகம் எழும் வகையில் இந்த நடவடிக்கைகள் இருக்கின்றன. எல்லோரும் சேர்ந்து கொண்டு தி.மு.க. ஒரு ஊழல் கட்சி என்ற பிம்பத்தை கட்டியெழுப்ப நினைக்கிறார்கள்.

ஆனால், தமிழக மக்கள் மிகுந்த அரசியல் கொண்டவர்கள். எதிர்பாராமல் சில விஷயங்களைப் புரிந்துகொள்வார்கள். 2011ல் இருந்து 2021வரை தி.மு.க. ஆட்சியில் இல்லை. எங்கள் மீது தவறு இருந்திருந்தால் அந்தப் பத்தாண்டுகளில், ஜெயலலிதா முதல்வராக இருந்த போது நடவடிக்கை எடுத்திருக்கலாமே? 2014ல் ஆட்சிக்கு வந்த அமலாக்கத்துறை நடவடிக்கை எடுத்திருக்கலாமே?

பா.ஜ.க.வைப் பொருத்தவரை காங்கிரசிற்குப் பிறகு தி.மு.கவைப் பார்த்துத்தான் மிகவும் பயப்படுகிறார்கள். ஒரு நடவடிக்கையை யார் எடுக்கிறார்கள் என்பதை வைத்தே அதனை மக்கள் புரிந்துகொள்வார்கள். இதனால் எல்லாம் தி.மு.கவின் பெயரைக் கெடுக்க முடியாது. 2019ல் 39 இடங்களில் ஒரு இடத்தை தி.மு.க இழந்தது. இந்த முறை 39 இடங்களையும் தி.மு.க. பிடிக்கும்" என்கிறார் கான்ஸ்டைன்டைன்.

தி.மு.க. அமைச்சர்கள் மீது மட்டுமல்லாமல் இதே காரணங்களுக்காக அ.தி.மு.கவின் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் வளர்மதி ஆகியோர் மீதான வழக்குகளும் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இதில் வளர்மதி மீதான வழக்கிற்கு மட்டும் உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

# “எதிர்ப்பின் மரணம்” புட்டினின் ரஷ்யாவின் இனறைய நிலை

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் 30 வருடங்களுக்கும் அதிகமான சிறைத்தண்டனையை ஆர்க்டிக் பிராந்தியத்தின் தொலைதூர சிறையில் அனுபவித்துக்கொண்டிருந்த அலெக்சி நவால்னி யின் மரணம் விளாடிமிர் புட்டின் கட்டியெழுப்பிய அரசில் எதிர்ப்பியக்கத்தினதும் மாறுபட்ட கருத்துக்களினதும் இன்றைய அந்தஸ்தை அதிர்ச்சிக்குரிய வகையில் நினைவூட்டுவதாக இருக்கிறது.

பல வருடங்களாக கிரெம்ளினின் முக்கியமான எதிர்ப்பாளராக நவால்னி விளங்கி வந்திருக்கிறார். 2020 ஆம் ஆண்டில் அவருக்கு நஞ்சூட்டிக் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்றில் உயிர்தப்பிய அவர் சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டார். “சுதந்திரத்துக்காக போராடுவதற்காக” திரும்பிவந்த அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவரது மரணத்துக்கான காரணம் என்னவென்று இன்னமும் தெரியவில்லை.

நச்சுத்தாக்குதலுக்கு நவால்னிக்கு பல உடல்நலப் பிரச்சினைகள் இருந்தன. சிறையில் அவருக்கு உகந்த சிகிச்சை வழங்கப்படவில்லை என்றும் அதனால் உண்ணாவிரதம் இருந்ததாகவும் அவரது வழக்கறிஞர்கள் முறையிட்டிருந்தார்கள்.

தனது கணவரைப் புட்டின் கொலை செய்துவிட்டார் என்று கூறியிருக்கும் நவால்னியின் மனைவி ஜூலியா நவால்னாயா அவரது போராட்டத்தைத் தொடரப்போவதாகச் சூளுரைத்திருக்கிறார்.



நவால்னியின் மரணத்துக்கு காரணம் எதுவாக இருந்தாலும் இந்த துன்பியல் நிகழ்வுக்கான பழியில் இருந்து ரஷ்ய அரசு தப்பமுடியாது. நவால்னி கட்டியெழுப்பிய அரசியல் எதிர்ப்பியக்கத்தை நிர்மூலஞ்செய்வதில் ரஷ்ய அரசு உறுதியாக இருந்தது. ரஷ்யாவில் கட்டுப்பாடான முறையில் கையாளப்படும் ஆட்சி முறைமையில் கிரெம்ளினால் சகித்துக் கொள்ளப்படும் எதிர்க்கட்சிகளும் அரசினால் எதிரிகளாக நடத்தப்படும் எதிர்ப்பாளர்களும் இருக்கிறார்கள்.

ஒரு வலதுசாரி இனத்துவ தேசியவாதியாக தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்த நவால்னி அரசினால் எதிரிகளாக நடத்தப்படும் எதிர்ப்பாளர்கள் வகைக்குள் இருந்தார். இதே வகைக்குள் வரும் இன்னொரு எதிரணி அரசியல்வாதியான போறிஸ் நெம்ட்சோவ் 2015 ஆண்டு மாஸ்கோவில் சுட்டுக்கொல்லப்



பட்டார்.

ரஷ்யாவை 24 வருடங்களாக ஆட்சி செய்துவரும் புட்டின் இவ்வருடத்தைய தேர்தல் மூலமாக மேலும் ஆறு வருடங்களுக்கு தனது ஆட்சியை நீடிக்கும் திட்டத்தைக் கொண்டிருக்கிறார். நவால்னியிடம் இருந்து எந்தவொரு பெரிய அரசியல் அச்சுறுத்தலையும் புட்டின் எதிர்நோக்கவில்லை.

லெவாடா நிலையம் போன்ற சுயாதீனமான அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகளின் பிரகாரம் புட்டினின் செல்வாக்கு உயர்ந்த மட்டத்திலேயே இருக்கிறது. தேர்தல்கள் மிகவும் இறுக்கமாக கட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது. உக்ரெய்ன் போரை கடுமையாக கண்டித்த இரு வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு தடைசெய்யப்பட்டிருக்கும் அதே வேளை, புட்டினின் எதிராளிகளும் அவரின் தலைமைத்துவத்தை மெச்சும் விசித்திரமான நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நவால்னி பல தசாப்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதால் ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பியக்கங்களுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. என்றாலும் நிவால்னி சிறையில் மரணமடையவேண்டியிருந்த நிலைமை எதிர்ப்புக்குரல்களுக்கு அரசு எந்தளவுக்கு அஞ்சுகிறது என்பதைக் காட்டுகிறது. நவால்னியின் மூன்று வழக்கறிஞர்களும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அதேவேளை வேறு இரு வழக்கறிஞர்கள் வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் செய்கிறார்கள்.

நவால்னியை சிறையில் அடைத்து வைத்திருந்ததன் மூலம் எதிர்ப்பாளர்களுக்கு ஒரு செய்தியைக் கூறுவதற்கு அரசு விரும்பியது. “வழிக்கு வாருங்கள் அல்லது விளைவுகளுக்கு முகங்கொடுங்கள்” என்பதே அந்த செய்தியாகும்.

நச்சுத் தாக்குதலையடுத்து சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு கூட்டிச்செல்லப்பட்ட பிறகு மீண்டும் ரஷ்யா திரும்பி வருவதற்கு விரும்பிய நவால்னி தனது அரசியல் செயற்பாட்டுக்கான உச்சவிலையைச் செலுத்தியிருக்கிறார்.

கிரெம்ளின் அதன் கைகளில் மேலும் மேலும் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை ரஷ்யா வெளிநாட்டில் நீண்ட போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறது. எந்த விமர்சனக்குரலையோ அல்லது எதிர்பியக்கத்தையோ அரசு விரும்பவில்லை.

பயமுறுத்துவதன் மூலமாக இதுவரையில் ஒழுங்கொன்றை அரசு நிலைநிறுத்தியிருக்கக்கூடும், ஆனால், அது நிலைபேறான ஆட்சிமுறையின் ஒரு வகைமாதிரி அல்ல என்பதை ரஷ்யாவின் சொந்த வரலாறே உணர்த்திநிற்கிறது.

( தி இந்து, ஆசிரிய தலையங்கம் )

